# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை18 ஞாயிற்றுக்கிழமை(03-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:07


## சி.பி.ஐ. அதிகாரிகள் கொழும்பு வந்தது ஏன்?

கொழும்பு,டிசெ.3

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. போன்றோருக்கும் உள்ள தொடர்புகள் சம்பந்தமான தமது விசாரணைகளின் ஒரு கட்டமாகவே இந்திய மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) அதிகாரிகள் மூவர் கொழும்பு வந்து திரும்பினர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டமா அதிபர் உட்பட இலங்கையில் சட்ட அதிகாரிகள் பலரைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டனர்

# லண்டன் மாவீரர் தின நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம் விசேட உரை!

- லண்டன் அரோனா மண்டபத்தில் இருந்து உதயன் விசேட செய்தியாளர் -

லண்டன்,டிசெ.3

மாவீரர் தினத்தை ஒட்டி லண்டனில் அரோனா மண்டபத்தில் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார்.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டிருந்த அந்த மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். மாவீரர் தினத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய நீண்ட உரையை - புலிகளின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கும் கொள்கைப் பிரகடனத்தை - விளக்குவதாக பாலசிங்கத்தின் உரை அமைந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தை, புலிகளின் அரசியல் நிலைப்பாடு, இராணுவ நிலைமை, சர்வதேச அரசியல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களவரை பாதுகாக்க புதிய அமைப்பு

கொழும்பு,டிசெ.3

சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு ஒன்று தெற்கில் அமைக்கப்பட்டுள்ளது.

'சிஹல உறுமய' கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக எழுந்த போட்டி காரணமாக விலகிய எஸ்.எல்.குணசேகரா இந்த அமைப்பை ஸ்தாபிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

சிங்களவர்களின் உரிமைகளைப் பேணும் விடயத்தில் அரசு சிற்றன்னை போல் நடந்து கொள்வதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.(ஐ-6-7)

# நிபந்தனையற்ற பேச்சு நடத்த அரசும் தயார் என்கிறார் பிரதமர்

## ஆனால் புலிகள் மீண்டும் தம் நிலைப்பாட்டை நோர்வே மூலம் தெளிவுபடுத்த வேண்டுமாம்

கொழும்பு,டிசெம்பர்3

**விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்துவதற்கு அரசாங்கமும் தயார். ஆனால் இது விடயத்தில் தமது நிலைப்பாட்டை நோர்வே மூலம் விடுதலைப் புலிகள் மீண்டும் தெளிவுபடுத்த வேண்டும்.**

**- இப்படிக் கூறியிருக்கின்றார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா.**

தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து தமிழ்ப் பத்திரிகைகளுக்கு நேற்று முன்தினம் கொழும்பில் வைத்துத் தனித்தனியாக வழங்கிய பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரச்சினைக்கு யுத்தம் மூலமே தீர்வு காணவேண்டும் என்பதே எனதும், ஜனாதிபதியினதும் நிலைப்பாடாகும். இது விடயத்தில் அரசுக்கோ, எனக்கோ, ஜனாதிபதிக்கோ மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை. எங்கள் அனைவரதும் நிலைப்பாடும் ஒன்றே.

பிரச்சினையின் போக்கு சற்று மாற்றம் அடைந்துள்ளது அவ்வளவே.

நிபந்தனையற்ற பேச்சு நடத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் வெற்றியளித்தால்

# மூன்று கட்டங்களில் பேச்சு; பிரதமரும் பங்குபற்றுவார்?

கொழும்பு,டிசெ.3

தற்போது இடம்பெறும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை மூன்று கட்டங்களாக நடத்த அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முதற் கட்டமாக அமைச்சர்கள் அடங்கிய குழு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தும் என்றும் -

இரண்டாவது கட்டப் பேச்சுக்களில் அரச தரப்பில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு கட்டங்களிலான பேச்சுக்கள் வெற்றியளிக்கும் பட்சத்திலேயே மூன்றாவது கட்டமாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பேச்சு இடம்பெறும் என்று உணவு, வியாபார, அபிவிருத்தி அமைச்சர் ரெஜி ரணதுங்கவை மேற்கோள்காட்டி 'லக்பிம' சிங்கள இதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஐ-7)

## திருமலையில் காத்திருந்த

# பயணிகளை ஏற்றாமலேயே 'லங்கா முடித்த' வருகின்றது!

திருகோணமலை,டிசெ.3

காங்கேசன்துறையிலிருந்து 662 பயணிகளுடன் புறப்பட்ட 'லங்கா முடித்த' கப்பல் நேற்று திருமலை போய்ச் சேர்ந்ததும் பயணிகளை இறக்கிவிட்டு அங்கிருந்து பயணிகள் எவரையும் ஏற்றாமலேயே உடனடியாக வடக்கு நோக்கிப் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் யாழ். செல்வதற்காக கடந்த சில வாரங்களாக திருமலையில் தங்கி நின்ற நூற்றுக்கணக்கான பயணிகள் இதனால் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

எவ்வித அறிவித்தலும் விடுக்கப்படாமலேயே கப்பல் நண்பகல் அளவில் வடக்கே புறப்பட்டது. பயண ஆயத்தங்களுடன் துறைமுகத்திற்கு வந்திருந்த பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இதேவேளை -

திருமலையில் தேங்கிக் கிடந்த குடாநாட்டிற்கான தபால் பொதிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

# 'லங்கா முடித்த' கப்பலின் அடுத்த சேவை நாளை?

## இன்று ரிக்கெட் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு 'லங்கா முடித்த' கப்பலின் அடுத்த பயணிகள் சேவை பெரும்பாலும் நாளை திங்கட்கிழமை அல்லது மறுநாள் செவ்வாய்க்கிழமை இடம்பெறலாம் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த கப்பல் சேவையில் பயணம் செய்ய 250 பயணிகளுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் ரயில் நிலையப் பகுதியில் வைத்து பயணச் சீட்டுக்கள் வழங்கப்படஉள்ளதாக வடக்கு மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் இணைப்பாளர் எஸ்.குகராஜன் அறிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற சேவையில் பயணம் செய்யப் புறப்பட்டுச் சென்று கப்பலைத் தவறவிட்ட 550 பயணிகளுக்கும் அடுத்த சேவையில் இடம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்றைய பயணச்சீட்டு விநியோகத்தில் யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளரால் சிகிச்சைக்காகச் செல்ல

(14ஆம் பக்கம் பார்க்க)

# களுவாஞ்சிக்குடியில் இருவர் சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு,டிசெ.3

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் களுவாஞ்சிக்குடி பொலீஸ் காவலரண் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பொதுமக்கள் இருவர் உயிரிழந்தனர்.

புலிகளின் பிஸ்ரல் குழு உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலீஸ் காவலரணை நோக்கிச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகவும்-

அச்சமயம் பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே பொதுமக்களில் இருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வுபெற்ற தபால் அதிபரான கே. அழகரட்ணம் (வயது 80) என்பவர் துப்பாக்கிச் சூடுபட்டு அந்த இடத்திலேயே மரணமானார். ஹோர்லிக்ஸ் நிறுவன விற்பனைப் பிரதிநிதியான வேல்முருகு சிறிதரன் (வயது 42) என்பவர் காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானார்.

பொலீஸ் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பீ.சி.பொன்சேகா என்ற கான்ஸ்டபிள் காயமடைந்தார். (ம-7-2?)

## படையினர் பதில் தாக்குதல் நடத்தவில்லை

கொழும்பு, டிசெ.3

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் நாகர்கோயில் மற்றும் முகமாலைப் பகுதிகளில் உள்ள படையினரின் பாதுகாப்பு நிலைகள் மீது மோட்டார்கள் மற்றும் சிறுரக ஆயுதங்களைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம்,டிசெ.3

நேற்று உரும்பிராய்ப் பகுதியில் உள்ள படையினரின் காவலரண் மீது கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும், மற்றொரு சிப்பாய் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

# வட கிழக்குக் கடலில் புலிகளின் ஆயுதக் கப்பல்?

கொழும்பு,டிசெ.3

விமான எதிர்ப்புப் பீரங்கி உட்பட புலிகளுக்குத் தேவையான பெருந்தொகை ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று இலங்கையின் வட கிழக்குக் கடலில் இலங்கையிலிருந்து சுமார் 400 கடல் மைல் தொலைவில் தரித்து நிற்பதாக புலனாய்வு வட்டாரங்கள் விமானப்படைக்கும் கடற்படைக்கும் எச்சரிக்கைத் தகவல்களை அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியக் கடற்படைத் தரப்பு வழக்கமாகத் தரும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே இத்தகைய எச்சரிக்கை அறிவித்தல்கள் விடுக்கப்படுவதாக உயர் வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

முல்லைத்தீவை அண்டிய கடற்பகுதியில் வைத்து புலிகள் இந்த ஆயுதங்களை இறக்க முயற்சிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றோம்



### உயர்திரு.சின்னையா நடராஜலிங்கம்
(இலங்கை வங்கி முகாமையாளர் - பருத்தித்துறை)

அவர்கள் யாழ். மாவட்ட பிரதேச முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளதையிட்டு எம் மனமுவந்து வாழ்த்துவதுடன் அவர் தம் மேலான பணிகள், வங்கிக்கும், எம்மக்களுக்கும் தொடரவும், அதி உன்னத நிலை அடைந்து பெருவாழ்வு வாழவேண்டியும் வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்
வைஷ்ணவி நகைப் பூங்கா.

பஸ் நிலையம் முன்பாக
பிரதான வீதி,
நெல்லியடி.

(C/14117)



## பாராட்டு விழா



உயர்திரு
### நன்னித்தம்பி இராஜரட்ணம்
(நாகம்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், உரிமையாளரும்)

அவர்கள் 17-11-2000 அன்று மல்லாகம் நீதிவான் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததை முன்னிட்டு அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையம் நடத்தும் பாராட்டு விழா இன்று (03-12-2000) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணிக்கு நிலைய மண்டபத்தின் உபதலைவர் திரு. மு.நடராஜா தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிஞர் ஐயன்னா சனசமூகநிலையம்,
அறிஞர் ஐயன்னா வி.கழகம்,
அறிஞர் ஐயன்னா முன்பள்ளி.

சுன்னாகம்.

(81190)



## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 11.01.1939
உதிர்வு 03.11.2000

### திரு. சின்னையா முத்துக்கிருஷ்ணர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/க.த.க.வி.)

கடந்த 03.11.2000 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய, சபிண்டீகரண கிரிகைகள் 03.12.2000 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

மனைவி
பூமணி முத்துக்கிருஷ்ணர்

தபாற்கந்தோரடி,
கந்தரோடை.

NG


### ஆவணங்கள் ஒப்படைப்பு

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஒரு தொகுதி பாடசாலை ஆவணங்கள் படையினரால் மீட்கப்பட்டு பாடசாலை அதிபர் திருமதி சி.சிவநாதனிடம் ஒப்படைக்கப்பட்டன.

(இ-31)


SHAMROCK
29/3, SOMASUNDRAM AVE.
Standard education with good discipline
Gr.6 முதல் 11 வரை
2001 - புதிய வகுப்புகள் ஆரம்பம்
09.12.2K Sat. 8 a.m.
✲ மாதாந்தப் பரீட்சைகளும் ஊக்குவிப்புப் பரிசில்களும்
"Life grows great only when it is disciplined"
(C/14121)



லஷ்சுமி சினிமா
இணுவில்
மாதவன், ஷாலினி நடித்த
அலைபாயுதே
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30 (ப.நேரம்)
(81154)



நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
விஜய் ஜோதிகா நடித்த
S.J.சூர்யாவின்
குஷி
(ரீல்ஸ்)
காட்சிகள் - 11.00, 2.30 (பி.நே.)



ராஜா யாழ்ப்பாணம்
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.)
6.12.2000 முதல்
வாலி


## 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்பவர்கள் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் ஆகியோரில் இதுவரை 2ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிர்வரும் புதனகிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தரிடம் பெற்ற உறுதிப்படுத்திய கடிதத்துடனும், தேசிய அடையாள அட்டையுடனும் சமுகம் தருமாறு கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன் தெரிவித்தார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

லயன்
### சி.ந.கதிர்வேலு J.P

எமது தர்மகர்த்தாக்கள் சபை உறுப்பினரும், சிறந்த சமூக சேவையாளருமான திரு. சி. ந. கதிர்வேலு அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு சபையினரும் ஆச்சிரம வாசிகளும் அக மகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

அவரது சேவைப் பணிகள் மேலும் சிறப்புற இறைஅருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம
தர்மகர்த்தாக்கள் சபையினர்

வதிரி,
கரவெட்டி.

(C/14088)



BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2000/2001
கலை, வர்த்தக, கணித, உயிரியல்
மீட்டல் வகுப்புகள்
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் : 04-12-2000 திங்கள் 2.00 p.m
(81182)



## தவறான தகவல்

நிமலராஜன் குடும்பத்தின் நலன்காக்கும் நிதிக்கு எனது பெயரில் வேறு எவரோ 50 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார். (02-12-2000 உதயன்) அதற்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை. நிறுவன ரீதியாக நான் எனது பங்களிப்பை செலுத்திவிட்டேன்.

சபா. தியாகராஜா,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(C/14114)



## பாராட்டுகிறோம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும்,
சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட
நாகம்ஸ் ஸ்தாபகரும்
நாகம்ஸ் சக நிறுவனங்களின்
உரிமையாளருமாகிய

### நன்னித்தம்பி இராஜரட்ணம்

அவர்கள். சமாதான நீதிவானாக சத்தியப்
பிரமாணம் செய்ததை முன்னிட்டு நாகம்ஸ்
சினிமா முகாமையாளரும் சகஊழியர்களும்
அவரை வாழ்த்தி வரவேற்பதுடன்
அவருடைய சேவைகள் மேன்மேலும் வளர
வேண்டும் என்றும் பாராட்டிக்
கௌரவிக்கின்றனர்.

சினிமா முகாமையாளரும்,
ஊழியர்களும்

சுன்னாகம்.

(81178)

## வாழ்த்துகின்றோம்!

2000ஆம் ஆண்டு ஐந்தாம் தரப்
புலமைப் பரிசில் பரீட்சையில்
யாழ். மாவட்டத்தில் முதன்மை நிலையில்
59 மாணவர்களைச் சித்தி பெறவைத்த

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய

**அதிபர், ஆசிரியர்களை**

மனமார வாழ்த்தி வணங்குகின்றோம்.

(81205) — மாணவர்கள், பெற்றோர்கள்.



யாழ். மாவட்ட

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச

## விசேட பொதுக் கூட்டம்

## 17 - 12 - 2000

மேற்படி கூட்டம் 2000- 12- 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். ப. நோ. கூ. சங்க கேட்போர் கூடத்தில் சமாசத் தலைவர் திரு. ச. முருகேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்ட நிகழ்ச்சி நிரலும் வரவு செலவுத் திட்டம் 2001 கணக்காய்வு அறிக்கை 1998 அதிகாரக் கடிதமும் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவ சங்கங்கள் இவற்றை சமாச காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வரவு செலவுத் திட்டம், கணக்காய்வு அறிக்கைகள் ஆகியவற்றை விரிவாகப் பார்வையிட விரும்பும் சங்கங்கள் அலுவலக நேரங்களில் (காலை 8.30—4.30) வந்து பார்வையிட்டு ஒத்துழைக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

பதில் மாவட்ட செயலாளர்,
யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம்

637, (383), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/14116)



## பதினாறாவது பரிவு நினைவுகள்



அமரர்

**அழகரத்தினம் சுந்தரமூர்த்தி**
**(மாத்தளை மூர்த்தி)**

முன்னாள் தர்சினி ரான்ஸ்போர்ட் உரிமையாளர்

அன்னையின் மடியில்: 09_11_1950
எம்மவர் இதயத்தில்: 03_12_1984

எண்ணிரண்டு ஆண்டுகள் எப்படித்தான்
சென்றதுவோ?
என்றென்றும் உன்நினைவே இதயத்தில் இருக்குதையா!
கண்ணாக எமைப்பேணிக்கருத்தோடு வளர்த்தவரே!
மண்மீதிருக்கும்வரை மறப்போமா உம் நினைவை?

என்றும் உம் நினைவோடு
— குடும்பத்தினர்.

சர்மிளா றேடேர்ஸ்
பலாலி வீதி,
உரும்பிராய். (81193)


## பாகிஸ்தான் துணைத்தூதர் வெளியேற்றம்

டாக்கா, டிசெ. 3

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தான் — பங்களாதேஷ் போர் குறித்து ஆத்திரமூட்டும் வகையில் பேசியதற்காக பாகிஸ்தானியத் துணைத் தூதரை தனது நாட்டை விட்டு பங்களாதேஷ் அரசு வெளியேற்றியுள்ளது

யுத்தத்தின்போது பாகிஸ்தான் தனது இராணுவம் புரிந்த உரிமை மீறல்களுக்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று பங்களாதேஷ் எதிர்பார்க்கக்கூடாது என்று துணைத் தூதர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

## நைஜீரியாவில் எண்ணெய்க்குழாய் வெடிப்பு

லாவோஸ், டிசெ. 3

நைஜீரியாவில் பெற்றோலியக் குழாய்ப்பாதை வெடித்து எரிந்ததில் 60 பேர் உடல் கருகி இறந்தனர்.

லாவோஸ் துறைமுகத்துக்கு வெளியே நைஜீரியத் தேசிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல் விநியோகக் குழாய்ப் பாதையில் துறைமுகப் பகுதியில் வசிக்கும் மீனவர்கள் திருட்டுத்தனமாகத் துளையிட்டு எரிபொருளைத் திருடுவது வழக்கம்

திருட்டுத்தனமாக மீனவர்கள் இட்ட துளைகளை அடைத்து எரிபொருள் விநியோகப் பாதையை செப்பனிடும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மற்றொரு புறத்தில் பல மீனவர்கள் எரிபொருளைத் திருடிக் கொண்டு இருந்தனராம், அப்போது திடீரென்று குழாயில் தீப்பற்றி எரிந்ததில் மீனவர்கள் 60 பேர் சிக்கிக் கருகினர்.

இந்தக் கோரவிபத்து நடைபெறுவதற்கு சிறிது நேரம் முன்னதாக குழாயில் வேறு ஓர்இடத்தில்தீப்பற்றி அணைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஒ-8)

### உலக அரங்கில்

## சீனா- அமெரிக்கா இராணுவ உதவிப் பரிமாற்றம்

பெய்ஜிங, டிசெ. 3

சீனாவும் அமெரிக்காவும் உயர்தர இராணுவப் பரிமாற்றங்களுக்கு ஒப்புக் கொண்டுள்ளன.

பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளுக்கு அணு ஆயுத ஏவுகணைகளைத் தயாரிக்க உதவுவதில்லை என்ற சீனாவின் வாக்குறுதியை அடுத்து அமெரிக்கப் பாதுகாப்புத் துறைத் துணை அமைச்சர் வோல்டர் சோகொம் சீன அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனையில் இவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

## மாணவரை அடிப்பதற்கு நீதிமன்றம் தடை

புதுடில்லி, டிசெ. 3

பாடசாலைகளில் தண்டனை என்ற பெயரில் மாணவர்களை அடிப்பதற்கு டெல்லி உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பொது நலமனு ஒன்றின் மீதான தீர்ப்பிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் மாணவர்கள் சுதந்திரமாகவும், கண்ணியத்துடனும் கல்வி பெறுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் தீர்ப்பில் நீதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## வீரப்பனின் கடந்த காலம் குறித்த சி.பி.ஐ. விசாரணைகளுக்கு நெடுமாறன் வலியுறுத்து

சென்னை, டிசெ. 3

இந்திய அரசின் மத்திய புலனாய்வுத் துறையினர் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் கடந்த 10 ஆண்டு கால நடவடிக்கைகள் குறித்து விசாரிக்கும் பட்சத்தில் அந்த விசாரணைகளை எதிர்நோக்கத் தயார் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் விடுத்த அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ள நெடுமாறன் மேலும் —

இத்தகைய ஒரு விசாரணையின் மூலம் மட்டுமே வீரப்பனுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகள் அம்பலமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

வீரப்பனின் காட்டுப்பகுதி உள்ள சத்தியமங்கலம் தொகுதியில், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக காங்கிரஸ் கட்சியினரே நீண்டகாலமாக இருந்து வந்தனர். த. மா. கா. உருவான பின்னர் அக் கட்சியைச் சேர்ந்தவர்களே சத்தியமங்கலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

வீரப்பனின் நடவடிக்கைகளுடன் சத்தியமங்கலம் அரசியல்வாதிகளுக்குத் தொடர்புண்டு என்று முன்னர் செய்திகள் வெளி வந்திருந்தன.

தற்போது காங்கிரஸ் மற்றும் த. மா. காவினர் விடுதலைப் புலிகள் மற்றும் நெடுமாறன் ஆகியோருக்கும் வீரப்பனுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8-6)

## மேற்குகரையில் 10 வீத நிலத்தை ஒப்படைக்க இஸ்ரேல் இணக்கம்

நீடிக்கப்பட்ட இடைக்கால ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்குக் கரைப் பகுதியில் சுமார் 10 சதவீத நிலப்பரப்பை பலஸ்தீனர்கள் வசம் ஒப்படைக்க இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

காஸாவின் பெத்தலகேமிற்கு அருகில் வன்முறைகள் மீண்டும் வெடித்துள்ளதைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற வன்செயல்களில் 3 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். காஸா ஸ்ரிப் பகுதியில் இருந்து கட்டுப்பாட்டு எல்லைகளை மீறி ஆயுதங்களுடன் உள்ளே நுழைய முயன்றவர்கள் மீதே தாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் உயிரிழந்தவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்று பலஸ்தீனர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் மேற்குக்கரைப் பிரதேசத்திலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கற்கள் மற்றும் தடிகளால் இஸ்ரேலிய காவல் நிலைகளை நோக்கி தாக்குதல் நடத்திய பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது (ம-8)

## பாண்டிச்சேரி அமைச்சருக்கு புலிகளுடன் தொடர்பாம்!

புதுவை. டிசெ. 3

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் காங்கிரஸ் தலைமையிலான அரசில் அமைச்சராகப் பதவி வகிக்கும் ஒருவருக்குப், இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாகப் பாண்டிச்சேரி பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

குறிப்பிட்ட அமைச்சரின் வீட்டின் ஒருபகுதி விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளதாகக் கூறிய கண்ணன் அந்த அமைச்சரின் பெயரை வெளியிட மறுத்து விட்டார்

அமைச்சருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான தொடர்பு குறித்து விசாரணை நடத்தப்பட்டால் விசாரணை அமைப்பிடம் இதற்கான ஆதாரங்களை அளிக்கத் தான் தயாராக இருப்பதாகக் கண்ணன் மேலும் தெரிவித்தார்.


உ
கணபதி துணை

## வல்வை நெடியகாட்டுத் திருச் சிற்றம்பலப் பிள்ளையார் தேவஸ்தானம்

கீழ்க்காணும் மரங்கள் குறிப்பிடப்பட்ட அளவுகளில் கண்டங்களாகத் தேவைப்படுகிறது. இதற்கான விலை விவரங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

நேரிடையாகப்பார்வையிட்டபின்பே கொள்முதல் செய்யப்படும்.

| மரம் | அளவு | நீளம் | தொகை |
|---|---|---|---|
| இலுப்பை | 10'' X 6'' | 21 அடி | 2 |
| இலுப்பை | 10'' X 6'' | 15 அடி | 6 |
| வேம்பு | 6'' X 3'' | 21 அடி | 4 |
| வேம்பு | 6'' X 3'' | 15 அடி | 8 |
| வேம்பு | 5'' X 5'' | 4 அடி | 24 |
| வேம்பு | 4'' X 3'' | 6 அடி | 12 |

அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர், பரிபாலன சபை,
திருச்சிற்றம்பலப் பிள்ளையார் தேவஸ்தானம்,
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

- பரிபாலன சபையினர்.

(சி/14120)

# வேலணை பிரதேச சபை
## 2001 ஆம் ஆண்டுக்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

வேலணை பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பிக்கலாம்.

**அ. பொருள்கள் :—**

1. காகிதாதிகள் — எழுதுபொருள்கள்
2. ஈர்க்குத்தடி, தும்புத்தடி
3. மரத்தளபாடங்கள் — கதிரை, மேசை, வாங்கு
4. பாவனைப் பொருள்கள் — வீம், கார்பிக், சவர்க்காரம்
5. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள். பிக்கப். — ரயர், ரியூப், பற்றறிகள். பௌசர் — ரயர், ரியூப், பற்றறிகள்
6. இரும்புப் பொருள்கள் — மண்வெட்டி, கத்தி, வாளி, பூட்டுக்கள்
7. இறப்பர் முத்திரைகள்

**ஆ. சேவைகள் :—**

1. மரம், உருக்குத் தளபாடம் திருத்துதல்
2. நீரிறைக்கும் இயந்திரம் திருத்துதல்
3. பௌசர், பிக்கப் திருத்துதல்
4. பௌசர், பிக்கப் சேவிஸ்
5. தட்டச்சு இயந்திரம், நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம் பிரதி எடுக்கும் இயந்திரம், கணனி இயந்திரம் முதலியன (சேவிஸ் உட்பட திருத்தம்)

மேற்படிவேலைகளுக்காகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தை எனது பணிமனையில் ரூபா 100/- பதிவுக் கட்டணமாகச் செலுத்தி பெற்று 15-12-2000 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ந. கருணாகரகுருமூர்த்தி
தலைவர்,
வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபை,
வேலணை: 30 - 11 - 2000 (சி/14107)

## கல்விப்பணிமனைக்கு 'பிக்கப்' வாகனம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

வடக்கு — கிழக்கு மாகாண சபையால் மேலதிக மாகாண கல்விப் பணிமனைக்கு வழங்கப்பட்ட சொகுசு 'பிக்கப்' வாகனம் கடந்த 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக திருகோணமலையில் தரித்து நின்ற இந்த வாகனம் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-6)

## நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

யாழ் செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தினரால் கோப்பாய்ப் பிரதேச சபை உபஅலுவலகத்தில் எதிர்வரும் 5 ஆம திகதி செவ்வாய்க்கிழமையும், 7 ஆம் திகதி வியாழக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறவுள்ளதாக திணைக்கள நிறுவைஅளவைப் பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் தெரிவித்தார்.

(ம-30)

நாளை ஆரம்பம்!
A/L 2001
DAY CLASS
வர்த்தகப் பிரிவு
காலை 8 மணி
D. M. I.
யாழ்நகர்.
(81173)

# 7 ஆம் ஆண்டு நன்றி நினைவஞ்சலி

(03 - 12 - 1993 — 03 - 12 - 2000)

சீரிய நிறை நற் பண்பாளனை
நன்றி உணர்வுடன் நினைவு கூருகின்றோம்



**Lourdes Raymond Muttiah**

**லூர்து றேமன்ட் முத்தையா**

உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன்
நம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்.

உமது நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

67/1, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம். (81062)

# வேலணை பிரதேச சபை
## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான
## மீள் கேள்வி அறிவித்தல்-2001

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01-01-2001 முதல் 31-12-2001 வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 08-12-2000 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 07-12-2000 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை வேலணை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப் பணம். கேள்விப் படிவக் கட்டணம ஆகியவற்றைப் பணமாகச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை இவ் அலுவலகக் கேள்விப் பெட்டியிலும், இணைப் பிரதியை உள்ளூராட்சி உதவியாளர், இல:29 செட்டித்தெரு. நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | குத்தகை விவரம் | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கப் படாதது) | கேள்விப்பிணை பணம் (மீளளிக்கக்கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | **சந்தைகள்** | | | |
| 01. | துறையூர் மீன்சந்தை | 100/- | 1000/- | 110000/- |
| 02. | புங்குடுதீவு " | 100/- | 750/- | 200000/- |
| 03 | நயினாதிவு வடக்கு மீன்சந்தை | 100/- | 1000/- | 250000/- |
| 04 | நயினாதீவு தெற்கு " | 100/- | 1000/- | 250000/- |
| 05. | அல்லைப்பிட்டி " | 100/- | 750/- | 100000/- |
| | **இறைச்சிக் கடைகள்** | | | |
| 01. | வேலணை மாட்டிறைச்சி விற்பனைக் கடைகளைத் தாமாகவே அமைத்துக் கொள்ள வேண்டும் | 100/- | 1000/- | 45000/- |
| | **கடைகள்** | | | |
| 02. | வேலணை வங்களாவடியில் புதிதாக அமைக்கப்பட்ட 02 கடைகளிற்கான மீள் கேள்வி (ஒன்றுக்கு) | 100/- | 1000/- | 50000/- |

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி (ஜே. பி. யு. எம்.)
தலைவர்,
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேச சபை,
வேலணை. (சி/14106)

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 2001 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

2001 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சென்ற வருடம் [2000 ஆம் ஆண்டு] நடைமுறையில் இருந்த அறவீட்டு விகிதமே மாற்றமின்றி நடைமுறையில் இருக்கும்.

**2001 ஆம் ஆண்டுக்கான:-**

1 ஆம் காலாண்டுக்கான வரி மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும்,
2 ஆம் காலாண்டுக்கான வரி ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும்,
3 ஆம் காலாண்டுக்கான வரி செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தப்பட வேண்டும்.

**விசேட கழிவு:-**

1. 2001 ஆம் ஆண்டின் 4 காலாண்டுக்களுக்குமான தொகையை 31—01—2001 இற்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு 10 சதவீத கழிவு வழங்கப்படும்.
2. 2001 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான தொகையைக் காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துபவர்களுக்கு 5 சதவீத கழிவு வழங்கப்படும்.

**தண்டம்:-**

குறிப்பிட்ட காலாண்டுக்கான வரியை அக்காலாண்டு முடிவடைவதற்கு முன் செலுத்தப்படாதவிடத்து,

1. வெற்றுக் காணிகளுக்கும் குடியிருப்பு ஆதனங்களுக்கும் 15 சதவீதத் தண்டமும்,
2. வியாபார நோக்கத்துக்கான ஆதனங்களுக்கு 20 சதவீத தண்டமும் அறவிடப்படும்.

**வரிவிலக்கும் ஆட்சேபனையும்:**

சேதமடைந்துள்ள, காலியாகவுள்ள ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டும் விதிக்கப்பட்ட ஆதனவரிக்கெதிரான ஆட்சேபனையின் பொருட்டுமான எழுத்துமூல விண்ணப்பங்கள் 31—01—2001 இற்கு முன்னர் எனக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இவ்வாண்டு தனித் தனியாக ஆதன உரிமையாளர்களுக்கு ஆதனவரி அறிவித்தல் வழங்குதற்கு முடியாமல் இருப்பதால் இவ் அறிவித்தலையே 2001 ஆம் ஆண்டுக்குரிய ஆதனவரி அறிவித்தலாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வரியிறுப்பாளர்களுக்குச் சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு இவ் வரி நிலுவைகளைச் செலுத்திப் பூரண எமக்கு ஆதரவு தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ம. க. சிவாஜிலிங்கம்
தலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
30—11—2000 (சி/14104)

# நாவலர் பரம்பரையில் நல்லதோர் அதிபர்

சைவத் தமிழ் வளர்ச்சி கருதி 1849 இல் நாவலர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்டது வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை. அவரது சிந்தனையின் பிரதிபலிப்பே இன்று தேசியப் பாடசாலையாக மிளிரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

**நாவலர் காவிய பாடசாலை**

சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசாமிப் புலவர், வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை, காசிவாசி குப்பிளான் செந்திநாதையர், வித்துவான் ந.சுப்பையாபிள்ளை முதலான கல்விமான்கள் நாவலர் காவிய பாடசாலையில் ஆசிரியர்களாக இருந்து சைவத்தையும், தமிழையும் வளர்த்து வந்தார்கள் கடந்த நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் நாவலர் பாடசாலையின் அதிபராக இருந்து அலங்கரித்த பெருமை அமரர் ஐயாத்துரை துரைராசா அவர்களையே சாரும்.


**நீத்தார் நயப்புரை**

ஒரு பாடசாலையின் அதிபராக இருக்கின்றவர் அதிபருக்கான கடமைகளை மட்டுமே புரியலாம். நாவலர் பாடசாலைக்கு அதிபராக வருகின்றவர்கள் அதிபருக்கான கடமைகளுடன் நாவலர் தர்மகர்த்தா சபையின் குறிக்கோளின்படி நாவலர் சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டும். 1962 இல் இருந்து நாவலர் பாடசாலைக்கு அதிபர்களாக வந்தவர்கள் திறம்படத் தமது சேவையை ஆற்றி வந்தார்கள்.

துரைராசா அவர்கள் நாவலர் பாடசாலையில் ஆசிரியராக இருந்தவர். உபஅதிபரானார். அதிபர் பதவியை ஏற்க வேண்டிய ஒரு நிலையும் அவருக்கு ஏற்பட்டது. அதிபருக்குரிய கடமைகளுடன் நாவலர் தர்மகர்த்தா சபைக்குரிய பணிகளையும் நன்கு சுமந்தார். எவ்வளவுக்குத் தான் தலையில் சுமை ஏறினாலும் அதனால் களைப்பதில்லை. எந்த நேரமும் உதடுகளில் புன்னகைதான்!

**நாவலர்தாசன்**

சிறுவைகிழார், சைவப்புலவர் இ.செல்லத்துரை அவர்கள், நாவலர்



பணியில் தலை நின்ற அதிபர் துரைராசா அவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"நாவலர்தம் நற்குறிக்கோள்
நாளும் நினைந்து
செயற் காவலராய் நின்ற துரை
ராசா........"

என்கின்றார். இத்தொடரின் பொருள் ஊன்றி உணரத்தக்கது.

துரைராசா அவர்கள் ஆளுமை மிக்க ஓர் அதிபர். நாவலர் பெருமானின் நோக்கங்கள் நிறைவு பெற உழைத்த நாவலர்தாசனுமாவர்.

**நட்புக்கு ஒருவர்**

குடும்பத் தலைவராயுள்ளவர் தம் குடும்பத்தைச் சார்ந்த அனைவரது வாழ்க்கையிலும், வளர்ச்சியிலும் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார். நாவலர் பாடசாலையாகிய குடும்பத்தின் தலைவராக இருந்த அதிபர் துரைராசா அவர்கள் உதவி ஆசிரியர், மாணவர், பெற்றோர் உள்ளிட்ட அனைவரது நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்தார். கல்வித் திணைக்களத்தைச் சார்ந்தவர்கள் 'துரை' என்று செல்லமாக அழைக்கும் அளவுக்கு எல்லோரது உள்ளங்களிலும் தமது பெயரைப் பதிய வைத்துள்ளார்.

நாவலர் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு நூற்றைம்பது ஆண்டு நிறைவு பெறுகிறது. குறித்த நிறைவு விழாவினைக் கொண்டாடும் முகமாக அதிபர் துரைராசா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட விழாச்சபை, ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு வந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள், தர்மகர்த்தாசபையினர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், விழாவுக்கான பூர்வாங்க வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் அதிபர் துரைராசா அவர்கள் அகால மரணமானார்கள்.

நாவலர் பாடசாலையில் பிரார்த்தனை மண்டபத்தில் இருக்கும் நாவலர் பெருமானுடைய உருவச் சிலையை, யாவரும் பார்த்து மகிழும வண்ணம் நாவலர் வித்தியாலய முன்றலில் நிறுவவேண்டும் என்பது அதிபர் அவர்களது பெருவிருப்பம். அதற்காக நன்றாக உழைத்தார்.

சைவத்தையும் தமிழையும் தம் இருகண்கள் எனப்போற்றி வளர்த்தவராகிய நல்லைநகர் நாவலர் பெருமான் இயற்கை எய்தும் பொழுது அவருக்கு வயது ஐம்பத்தேழு. நாவலர்தாசனாகிய நாவலர் மகாவித்தியாலயத்தின் மாணபுமிகு அதிபர் ஐயாத்துரை துரைராசா அவர்களும் தமது ஐம்பத்தேழாவது வயதற் காலமானார்.

வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாயிற்று

விதி இருந்தவாறு!

**ஆசிரியமணி**
**அ.பஞ்சாட்சரம்**
**நாவலர் தர்மகர்த்தா சபை உறுப்பினர்.**

## பாதுகாவலர் சங்கக் கூட்டம்

வடபகுதி காணமற்போனோர் கைதானோர் பாதுகாவலர் சங்க கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் காணமற்போனவர்களின் குடும்பத்தில் உள்ள படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபருடன் உரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் காணாமல போனவர்களின் குடும்பங்களில் இருக்கும் கல்வித் தகுதியுடைய இளைஞர், யுவதிகள் தமது பிறப்புச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் தவறாது சமுகமளிககுமாறு கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ம.6.5)


**இன்று மங்களகரமான திறப்பு விழா**

**தேவி அச்சகம்**

**114/19,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

அன்புக்குரியோர், ஆதரவாளர், வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி ந. கணேசமூர்த்தி
திரு. திருமதி சபா. தருமகுலசிங்கம்
(காஜநகர்)

(81405)



**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**2001 புதிய வகுப்புகள்**

ஆரம்பம்: 09-12-2000

தரம் 1முதல் **O/L** வரை

(81122)



**கலையகம்**

ஆவரங்கால் , புத்தூர்

**A/L DAY CLASS**

ஆரம்பம்: 4.12.2K 3.00 p.m

| | |
|---|---|
| தமிழ் | : நாக.தமிழிந்திரன் |
| அளவையியல் | : S.R.J.சுதன் |
| இ.நாகரிகம் | : A.எமில் |
| பொருளியல் | : T.விக்கி |
| கணக்கியல் | : S.பிரகாஸ் |
| வர்த்தகம் | : K.யசோ |
| பொதுஉளச்சார்பு | : P.P.சந்துரு |

பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களையும் அளவையியலில் A எடுத்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

- நிர்வாகம்.

(81115)



**கீரிமலை**

**பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்**

ஐயா,

அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் உங்களின் பணியை ஒப்பிட யாருமில்லை. தற்துணிவு, நேர்மை, கடமை, நேரம் தவறாமை, முதுமையிலும் இளமையோடு புன்சிரிப்புடன் இன்று பவள விழாக்காணும் உத்தமரே எம் படையை மதித்த பெரியோரே, பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி அருந்தவராஜா
2000 ஆண்டு ஜம்போறிக் குழுவினர்,
சென்ஜோன் அம்புலன்ஸ் படை,
யாழ்.மத்திய மாவட்டம்.

(81168)


# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்தவர் சகோதர பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன்.

உண்மைகளைச் சீரணிக்க முடியாதவர்களால் அவர் படுகொலை செய்யப்பட்டார். மூன்று சின்னஞ்சிறார்களைக் கொண்ட அவரின் இளம் குடும்பத்துக்கு உதவும் மனிதாபிமானப் பணியை உதயன் ஆரம்பித்தது.

நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதிக்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அள்ளி அள்ளி வழங்கி எமது மக்களின் இரக்க சிந்தைக்குச் சிகரம் வைக்கிறார்கள். எமக்கு மத்தியில் அன்புள்ளங்கள் நிறைந்துள்ளன. என்று எடுத்துக்காட்டி வருகின்றனர்.

உதவி நிதி நாளாந்தம் வந்து குவிகிறது இந்நிதியை நிமலராஜன் குடும்பத்தினரிடம் உரிய முறையில் சேர்ப்பிக்கும் பொருட்டு அன்பளிப்புகளைப் பெறுவதை எதிர்வரும் (டிசெம்பர்) 5ஆம் திகதியுடன் பூர்த்தி செய்ய உள்ளோம் என்பதை அறியதகருகின்றோம்.

கருணையும், வள்ளல் தன்மையும உள்ள எங்கள் வாசகர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

| **01.12.2000 (வெள்ளிக்கிழமை) வரை கிடைத்த நிதி:-** | | ரூபா ச. |
|---|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - | 10,44,597.75 |
| 1. காணி மேலதிக மாவட்ட பதிவகம-பருத்தித்துறை | - | 1,400.00 |
| 2. ஆதங்கத்துடன் ஒருவர் - யாழ்ப்பாணம் | - | 500.00 |
| 3. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் | - | 5,000.00 |
| 4. வர்த்தக சங்கம் - சுன்னாகம் | - | 1,000.00 |
| 5. நலன்புரிச்சங்கம்-வேலணை பிரதேச செயலகம் | - | 6,380.00 |
| 6. நலன்புரிச்சங்கம் - பளை பிரதேச செயலகம் | - | 2,500.00 |
| 7. ஓர் அன்பர் - தனங்கிளப்பு | - | 500.00 |
| 8. **I.I.S** கணனி நிறுவனத்தார் - யாழ்ப்பாணம் | - | 5,000.00 |
| 9. சி.சிவபாதம் (ஜோர்ச்) - டொறணி வாசா, பீச் றோட் - பருத்தித்துறை | - | 300.00 |
| மொத்தம் | - | 10,67,177.75 |

# நந்திக் கல்யாணம்!

தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூரின் சிறப்புகளுள் ஒன்று அங்குள்ள பிருகதீஸ்வரர் ஆலயம் என்னும் தஞ்சைப் பெருங்கோயில் சோழப் பேரரசன் இராஜராஜனாற் கட்டப்பட்ட இக்கோயில் இராஜராஜேஸ்வரம் என்றும் அழைக்கப்படுகின்றது. பொறியியலாளர்களைப் பிரமிக்க வைக்கும் நிழல் சாயாக் கோபுரம் இங்கேதான் இருக்கின்றது; மூலஸ்தானத்திலுள்ள சிவலிங்கமும் தம்ப மண்டபத்திலுள்ள நந்தியும் மிகப் பெரியவை.

வேறு எந்தத் திருக்கோயிலிலும் நடைபெறாத திருவிழா ஒன்று, ஆண்டுதோறும் இக் கோயிலில் நடைபெறுகின்றதாம்.

அது நந்தியின் திருக்கல்யாணப் பெருவிழா!

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இங்கு கூடுவார்களாம்!

திருக்கல்யாணத்திற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு -

மாப்பிள்ளையான நந்தி தேவருக்குப் பிரமாதமாக அலங்காரங்கள் செய்யப்பட்டு -

பூர்வாங்கக் கிரியைகள் எல்லாம் செய்யப்பட்டு -

மிக முக்கியமான கிரியைகளை செய்யும் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் -

கிரியைகளைச் செய்துகொண்டிருக்கும் சிவாச்சாரியார்களுள் ஒருவர் -

திடீரெனத் தும்முவாராம்!

அந்த "அபசகுனம்" காரணமாகத் திருக்கல்யாணம் தடைப்பட்டுவிடுமாம்!

சமீபத்தில் அந்தக் கோயிலுக்குச் சென்ற யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவருக்கு இப்படி நடக்கின்ற 'நடக்காத' கல்யாணத்தைப் பற்றி அங்குள்ள 'வழிகாட்டி' ஒருவர் விவரித்தாராம்!

இப்படியான ஒரு திருவிழா அங்கே நடைபெறுகிறதா அல்லது இந்த விவரங்களெல்லாம் அந்த வழிகாட்டியின் கற்பனைச் சரக்கா என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

எனினும் -

இனப்பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பதிற் பொறுப்பு வாய்ந்த பலரும் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் -

இந்த நந்திக் கல்யாணத்தின் நினைவு இடைக்கிடை எழுவதை ஏனோ, தவிர்க்க முடியவில்லை!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை பரவலான வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருக்கின்றது.

இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே போன்ற - இனப்பிரச்சினைத் தீர்வில் அதிக ஆர்வம் காட்டிவருகிற - நாடுகள் அந்த உரையை வெளிப்படையாகவே வரவேற்றுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ண -

ஐக்கிய தேசியக கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க -

இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் இணைத்தலைவர்களுள் ஒருவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் -

மலையகத் தமிழ்த் தலைவர்களான ஆறுமுகம் தொண்டமான், மனோ கணேசன், சந்திரசேகரன் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி -

ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் -

அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் தலைவர் ஆ.விநாயகமூர்த்தி -

தேசிய சமாதானத்திற்கான ஐக்கிய முன்னணியின் தலைவர் ஜெகான் பெரேரா -

காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் சு.பி. நாணயக்கார முதலிய -

தமிழ் மக்களின் அவஸ்தைகளையும் அவலங்களையும்; நேரடியாகவும் மறைமுகமாகவும் சிங்கள மக்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும் பயங்கரங்களையும்; நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற நலிவுகளையும் அழிவுகளையும் நன்குணர்ந்த பல தலைவர்களும் -

அந்த உரையை வரவேற்றுள்ளனர்!

பொது அமைப்புக்கள் பலவும் வரவேற்றுள்ளன.

அந்த உரையைப் பற்றி நேரடியான கருத்துக்கள் எதையும் தெரிவிக்காவிட்டாலும், விடுதலைப் புலிகளுடன் நேரிற் பேசி இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வைக் காண்பதே தனது இலட்சியம் என மேற்கு நாடுகளின் தலைவர்களிடம் கூறிவருகின்றார் ஐரோப்பிய விஜயமொன்றைத் திடீரென மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா!

தீர்வு தொடர்பான சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள், பேச்சு வார்த்தைகள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ளோர் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பே பரவலாகக் காணப்படுகின்றது!

எனினும் -

நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கும் ரத்னசிறி விக்கிரமநாயக்கா அடிக்கடி உதிர்த்துவரும் சில "பொ(வ)ன் மொழி"களும் -

சிஹல உறுமய, பூமிபுத்திர, மக்கள் விடுதலை முன்னணி போன்றவற்றின் கர்ச்சனைகள், சீறல்கள், சவால்கள், சபதங்களும்-

ஜனநாயக மரபைப் பேணுவதாகச் சொல்லிக் கொண்டு இவையனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொது ஊடகங்களின் 'அந்தரங்க' நோக்கும் -

மகா சங்கத்தினரின் 'அசாதாரண' மௌனமும் -

தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகப் பொறுப்பு வாய்ந்த அமைச்சரான டி.எம் ஜெயரட்ண அவர்களாற்

## மணிமண்டபம்

பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அனுரத்த ரத்வத்தை மீண்டும் பாதுகாப்புப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டமையும் -

ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட தீர்வுப் பொதிக்குத் தூசிதட்டி வர்ணம் பூசி, மீண்டும் அதை மேடையேற்றுதற்குச் சிலர் எடுத்துவரும் முயற்சிகளும் -

இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வை வெறும் "கனவாகவும் கதையாகவும் கற்பனை"யாகவும் ஆக்கிவிடுமோ என்ற பயத்தை ஏற்படுத்தவே செய்கின்றன!

இந்தப் பயத்தை "அர்த்தமற்ற" தாக்குவது, நாட்டின் நலனில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும்!

இவ்வேளையில் தமிழ்த் தலைவர்களுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள் இதுதான் -

வாக்குறுதி மீறல்கள், ஒப்பந்தக் கிழிப்புகள், தமிழ்த் தலைவர்கள் சிலரின் துரோகத் தனங்கள் போன்றவற்றால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவுகளை நினைவில் வைத்துக்கொண்டு -

நந்திக் கல்யாணத்தை 'அபசகுனமாக' அல்லாமல் ஒருவித எச்சரிக்கையாகக் கொண்டு -

ஓரணியில் - ஒரே குரலில் - தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தெளிவாகவும் தர்க்க ரீதியாகவும் முன்வைத்தால் -

பேச்சு வார்த்தையின் போது யார் தும்மினாலும் அது "தமிழ்த் தும்மல்" அல்ல என்பதை உலகம் நிச்சயமாக உணர்ந்து கொள்ளும்!

- சித்தன்

# இந்த வார இராசி பலன்

## 03.12.2000 - 09.12.2000

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச்சக்கரம் | | |
| | | | |
| வெ கே | கு புத | | செவ் |

*3.12.2000இல் அவிட்டம் 4ஆம் பாதம் சந்திரன் குடும்பம் இராசியில் நிற்கும்.*

*4.12.2000இல் மகரம் இராசியில் வெள்ளி மாறும்.*

*அரசியலில் உலகநாடுகள் உண்மை நிலை உணர்ந்து நியாய மான அழுத்தத்தைப் பிரயோகிக்கும். திடீர் அமைதி, மாற்றங்கள், மக்க ளின் மனங்களில் இடம்பெறும். இந் தியா என்ன சொல்லும்? செய்யும்? என எதிர்பார்ப்புக்கள் ஏற்பட இட முண்டு. இந்தியாவின் அரசியல் கருத்து அரசியல் வாதிகளிடத்தில் அபிப்பிராய பேதங்களை உருவாக் கும். வடக்கில் ஒரு நிலை, தெற்கில் அழுத்த நிலை தோன்ற இடம் உண்டு. மேற்குலகம், மத்திய கிழக்கு, கிழக்கு நாடுகளின் அரசி யல், இராணுவ நிலைப்பாடுகளில் கூடிய கரிசனை கொண்டு செயற் பட்டபடி இருக்கும். மழை, காற்ற ழுத்தம் கிழக்கு நாடுகளில் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

நாம் செய்த பாவதோஷத்தால் எமக்குப் பிறவிகள் வருகின்றன. அது காலதேவனான சூரியன் சக்தியால் பிதாவாகவும், சந்திரன் சக்தியால் தாயாகவும் வந்து இந்தப் பூமியில் பூமிகாரகனாக செவ்வாய் சாட்சியாக அவதரிக்க நாம் பிறந்து ஒரு வரம் பில் நடந்து செல்லுகின்றோம். இப் பிறவியில் செயலால், பேச்சால் பல பாவத்தைச் சேர்த்தும் - புண்ணியத் தைச் சேர்த்தும் பிறவியின் எண்ணிக் கையைக் கூட்டிக் குறைக்கின்றார் கள். இதையெல்லாம் சிந்திக்க நேர மில்லை என எண்ணுகிறீர்களா? அவ்வளவு அவசரம் உங்களுக்கு.

## மகாதேவா ஜோதிடம்

உங்களது தொழில் ஸ்தானத்தில் ஓடியாடிச் செயற்பட்டு உழைத்த படியே இருப்பீர்கள். எதிர்ப்பாலாரின் நன் மதிப்பைப் பெறுவீர்கள். தோல் வருத்தம், மூட்டுவருத்தம், நாரிப் பிடிப்பு என வருந்த இடமுண்டு. தீய நட்பு எப்பொழுதும் தீமையையே தரும் என்பதை மறவாது செயற் படுங்கள். தாய் வழியில் தொல்லை வரும். வைத்தியத்துறை, கலைத் துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி*

### இடபம்

ஒரு நோயாளி குணமாக, இறை வணக்கமும், வைத்திய ஒத்தனமும் சேர்ந்து செயற்பட வேண்டும். கால நேரத்தின் இயற்கைச் சக்திச் செயற் பாட்டை சோதிட சாஸ்திரத்தின் மூலம் மனிதர்கள் அறிந்து செயற்பட உத வியாக இருக்கின்றது. எனவே பொறு மையாக இருந்து செயற்படும் உங் களுக்கு இவைகளின் அருமைகள் புரியாமல் இருக்காது. தொழில் ஸ்தா னத்தில் உண்மையைப் பேசி, நல் லதைச் செய்யுங்கள். மேலதிகாரிக ளுக்கு மதிப்புக் கொடுத்து நண்பர் கள், எதிர்ப்பாலார் போன்றவர்களை அனுசரித்து நடந்து வாருங்கள். சிறு நீரகவருத்தம், மலச்சிக்கல், கைகால் அடிகாயங்கள், முதுகுப்பிடிப்பு என் பன வரலாம். பிரயாணத்துறை, ரி.வி, இசைத்துறை, கலைத்துறை, உண வுத்துறை போன்ற துறையினர்கள் நலன்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

### மிதுனம்

மனிதர்களுக்கு இயற்கையி லேயே மனம் உண்டு. அது ஒவ்வொ ருவரிடமும் மாறுபடுகிறது. இறை வன் வாதாட வந்தார் அரசசபையில். செயற்கை மணத்தை அறிந்த நக் கீரர் போன்றவர்கள் அது தவறு என வாதிடுவதில் அர்த்தமுமில்லை என நீங்கள் யோசிக்கிறீர்களா? அவ சரப்பட்டு எதிலும் முடிவு எடுக்காதீர் கள். காசு, பொருள் என ஓடி ஓடித் திரிவீர்கள். தொழில் பீடத்தில் போட் டிக்குக் குறைவிருக்காது. காசுப்பாடு [illegible] னப்படாதீர்கள். குடும்பத்தில் கலகம் உண்டு. அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள் உதவிகள் செய்து தரு வார்கள். சலிப்பு, களைப்பு, சளி, வாய்வுத் தொல்லை ஏற்பட இட முண்டு. சட்டத்துறை, கோயில்துறை, வியாபாரத்துறை போன்றவர்களுக்கு நன்மையான மாற்றங்கள் ஏற்பட இட முண்டு.

*அதிர்ஷ்டநாள்:-புதன்.*

### கடகம்

பாசம், நேசம், இரக்கம், முரட்டுச் சுபாவம் எல்லாம் கவர்ச்சியால் வந்த தாபத்தின் விளைவுதான். அதனால் எத்தனை மாறுபட்ட சிந்தனையை உங்களுக்குத் தருகின்றன. யோசிக் காதீர்கள் தொழில்ஸ்தானத்தில் புதிய வரவுகள் வர இடமுண்டு. நண்பர்க ளின் உதவிகள் ஆறுதலைத் தரும். சகோதர்களுக்கிடையில் மாறுபட்ட கருத்துக்கள் ஏற்பட இடமுண்டு. தூரத்திலிருந்து நற்செய்திகள் வரு வதனால் மன ஆறுதல்கள் ஏற்பட இடமுண்டு. நெஞ்சு வருத்தங்கள், பயவுணர்வுகள், வயிற்று வருத்தம், பித்தம் அதிகரித்தல் என்பன வர இடமுண்டு. முயற்சிக்கு ஏற்ப நன் மைகள் அதிகரிக்கும். காணிபூமி இலாபமாகும். வாக்குவாத உணர்வு அடிக்கடி வரும். பிரயாணத்துறை, அரசியல்துறை, சட்டத்துறை, கலைத்துறை, சம்பந்த மானவர்க ளுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

ஏழு வருஷத்திற்கு ஒருமுறை மனிதர்கள் - தமது நிலை, செயற் பாடுகளை மாற்றிக் கொள்ளுகிறார் கள். 7 கிரகங்கள், 7 வாரங்கள் மனிதனை ஆட்கொள்ளுவதன் உண்மைகளை நாம் அறிய முடிகி றது. அதற்காக இராகு கேது என்ற சாயற்கிரகங்களின் தன்மைகளை நாம் அறியாதவர்கள் அல்லர். அவை களும் மனிதர்களுக்கு பலன்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும். தொழில் முறையில் புதிய பல திட்டங்களை செயற்படுத்த எண்ணங்கள் ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள் கொடுக் கும். கண்வருத்தம், பித்தவருத்தங் கள் முதுகு உளைவு, குளிர் வருத் தங்கள் என்பன வர இடமுண்டு. அய லவர்கள் நல்லதைச் சொல்லமாட் டார்கள். செய்தித்துறை, சட்டத் துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடை வார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், சனி.*

### கன்னி

பிறப்பின் வரம்பில் பாவதோ ஷத்தை கூட்டுவதும் குறைப்பதுவும் மனிதர்களின் செயற்பாடுகளில் தங்கி யுள்ளது. எனவே நாம் எமது வினை களுக்குக் காரணகர்த்தாக்களாக இருக்கின்றோம். மன அமைதி வேண் டுமாயின் நாலு இடங்களுக்குச் சென்று, நாலு வார்த்தைகளைப் பேசு வோமா எனச் சிந்திப்பீர்கள். அதில் தவறில்லை. தொழில் ஸ்தானத்தில் உங்கள் வாக்குத் திறத்தால்பல நற் பலன்களைச் செய்வதுடன் பலருக் கும் சிறந்த ஆலோசனைகளைச் சொல்லுவீர்கள். தந்தை அல்லது தந்தை வழியினருடன் வாக்குக் கல கம் வரலாம். எதிர்ப்பாலார்கள் உதவி செய்து தருவார்கள். சளித்தன்மை, பித்தம், வாதம் வருத்தலாம். கிருமித் தாக்கத்தால் வருந்த நேரிடலாம். பிர யாணங்களைத் தவிர்க்கவும். எண் ணெய்த்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை, கமிஷன்துறை போன்ற வற்றில் தொடர்பானவர்கள் பல நன் மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

அஷ்டலட்சுமி வழிபாடு உடைய வர்களை தெய்வசக்தி காப்பாற்றிய படி இருக்கும். நாம் நம்பிக்கை - மன நிறைவு கொண்டு இறைவனை வழி படும் பொழுது எமக்கு எமது பிதா வான இறைவன் எப்பொழுதும் அப யம் அளிப்பார். எனவே தொழில் ஸ்தானத்தில் நம்பிக்கையுடன் நல்ல வற்றைச் செய்து வாருங்கள். அத னால் எல்லோரதும் அன்பும், ஆதர வும் உங்கள் பக்கம் இருக்கும். பணக்கஷ்டம் இருக்கும். இடமாற்றங் கள் சகஜம். குடும்பத்தில் நன்மை யான பேச்சுகள் நடக்க இடமுண்டு. சகோதரங்களுக்குச் சிறப்புக்கள் ஏற் படும். மருந்துத்துறை, சட்டத்துறை, விவசாயத்துறை, ஹோட்டல்துறை, கலைத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். தோல்வருத்தங்கள், நரம்புச் சோர்வு, தலைவலி, வாய் வுத்தொல்லைகள் என்பன வருத்த இடமுண்டு. தூரத்துச் செய்திகள், பிரயாண அலுவல்களில் கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:-புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

இந்த உடல் ஆசை அழிந்து - உயிர் உடலை விட்டுப் பிரிந்து சென்று மறுபிறப்பு எடுப்பதை யாவ ரும் அறிவர்-ஆனால் இன்றும் ஞானி கள் உடலில் உயிர் இருந்து - பிரிந்து திரும்பவும் இந்த உடலில் புகுந்து ஆடும் சித்தாட்டத்தை அறிந்த பலர் நம்மத்தியில் இருந் ததை ஒரு சிலர் அறிந்து செயற் பட்டிருக்கிறார்கள். அவர்கள் யார்? எப்படி அறிவது என்பது அவரவர் பக்குவத்தன்மையைப் பொறுத்தது. எனவே நாம் தொழில் ஸ்தானத்திலும் சரி, உலகவாழ்விலும் சரி எவருட னும் நிதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். நியாயமான உழைப்பில் நிம்மதி ஏற்படும். நாலு பேர் உங்க ளைப் பற்றிக் கதைப்பார்கள். பொருள் களவு போகலாம். பிரச்சி னைகளைப் பெரிதாக்காமல் நடு நிலைமைப் படுத்துங்கள். அமைதி கலகநாஸ்தி தரும். கிருமித் தாக் கம, சிரசு வருத்தம், நாசி அடைப்பு, சீதோஷ்ண பீடைகள் என்பன வர லாம். பற்றற்ற நிலையால் இழப்புக் களை அடைய நேரிடலாம். எண் ணெய்த்துறை, குருத்துறை, ரீ.வி. தொழில் நுட்பத்துறை, வியாபாரம் சம்பந்தப்பட்ட துறையினர்கள். நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:-புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### தனுசு

மனிதர்கள் என்னதான் துள்ளிய டித்தாலும் காலம்வரும் பொழுது தான் காரியங்கள் கைகூடி வெற்றி தருகின்றது. எனவே கடமை, உழைப்பு, சுற்றுவட்ட நடமாட்டம் என் பனவற்றில் கவனமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருந்து பொருளீட்ட முனையுங்கள். ஓடி, ஓடித தேடச் சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம். உங்கள் படபடப்பான பேச்சைக் கேட்டுப்பலர் ஓடி ஒழிப்பர். வயிற்று வருத்தம், குடல் வருத்தங் கள், உஷ்ணபீடைகள், என்பன வருத்த இடமுண்டு. இடமாற்றம் அல் லது பிரயாணங்களைத் தவிர்த்தால் நன்று. போக்குவரத்துத்துறை, செய் தித் தொடர்பு, கொம்பியூட்டர், அச் சுத்துறை, பாதுகாப்புத்துறை, பிரயா ணத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### மகரம்

அரசமரச்சக்தி, இலை, அதன் சுவாசக்காற்று, பெண்களின் கர்ப்பத் தில் ஏற்படும் குறைபாடுகளை நீக் கவல்லது என அறியமுடிகின்றது. விஞ்ஞான வளர்ச்சியில் பல செயற்கை முறைகள் வந்தாலும் மக் களின் சமய நம்பிக்கையை-உண் மைகளை எவரும் மாற்றிவிட முடி யாது. பழமையில் புதுமை காணும் நீங்களும் இடைவிடாத முயற்சிக ளால் முன்னுக்குவர முயலுங்கள். பொருள் இழப்பு ஏற்படலாம். இட மாற்றக் காலங்களில் நிதானமாக இருக்கவும். சிலருக்குப் பிரிவு ஏற் படலாம். எதிர்ப்பாலார்கள் உதவி கள் செய்வார்கள். நாம்பச் சோர்வு, வாய்வுத்தொல்லை, மூட்டுவலி, தோல்வருத்தங்கள் என்பன கொடுக்க இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்த் தால் நன்று. உணவுப் பொருள்கள் விற்பனை, சட்டத்துறை, மருந்துத் துறை, இசைத்துறை, கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு, நன்மை யான மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:-வியாழன், வெள்ளி,சனி.*

### கும்பம்

பாவதோஷம் என்றால் என்ன? ஒரு அன்பரின் கேள்வி இது? நல்ல தண்ணீர் தேடி - ஆலயக்கிணறுகளில் எத்தனை பேர் தண்ணீர் அள்ளிச் சென்று பாவிக்கின்றார்கள்? ஏன் அவர் கள் வீட்டுக் கிணற்றில் நல்ல தண் ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் செய்த பாவத்தால் தண்ணீர்ச் செல் வத்தைத் தரும் பூமியில் குடியிருக் கப் புலன் கொடுக்கவில்லை. இதே போன்று பதவியால், கல்வியால், பணத்தால் பெறும் சுகத்தை பெற முடியாமல் இப்பூமியில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? இவைகளெல் லாம் நாம் செய்யும் பாவ தோஷத் தால் வருகின்ற பலன்களாகும். எனவே எமக்கு எமது விதிப்படி கிடைத்த தொழிலைக் கொண்டு வருமானத்தைப் பெற்று வாழ முயல வேண்டும். நீங்களும் பொறுப்புடன் உங்கள் தொழிலைச் செய்து நல்ல பலனை அடைவீர்கள். வருமானப் பெருக்கம், இனஜன உதவிகள், எதிர்ப்பாலாரின் ஆரதவு என்பன கிடைக்கும். மறதி,கைகால்உளைவு, சளித் தொல்லை, தொண்டைவரட்சி, பயப்பாடு என்பன கொடுக்கும். குருத் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார் கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், சனி.*

### மீனம்

இலாபம் இல்லாத காரியங்களைச் செய்வதனால் சிலர் வீணாக நேர காலத்தையும், உடல்சக்தியையும், மனக்கஷ்டங்களையும் அடைந்து கொள்ளுகிறார்கள். எனவே நீங்கள் இலாபம் கருதித் தொழில் ஸ்தானத் தில் கவனமாக இருந்து நன்மை அடையுங்கள். அயலவர்களுடன் கொடுக்கல், வாங்கல் செய்து வீண் பகைமையை வளர்க்காதீர்கள். சனி, சமிபாட்டுக்குறை, பித்தரோகங்கள் வயிற்றுப் பொருமல் என்பன வர லாம். குருத்துறை, கமிஷன் வியாபா ரம், சந்தை வியாபாரம், மருந்துத் துறை தொடர்பானவர்களுக்கு பல வித மாற்றங்களும், நன்மைகளும் அதிகரிக்க இடமுண்டு. சனீஸ்வரன் தாக்கம் உண்டு. குலதெய்வ வழி பாடு முக்கியமாகும்.

*அதிர்ஷ்ட நாள்:வியாழன், சனி.*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சின்னத்துரை பாலசுந்தரம்**

**அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பளை செயலகப் பிரிவில் கிராமசேவை அலுவலர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டுவதோடு இன்னும்பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்து கிறோம்.**

பொ.பரமசாமி குடும்பத்தினர்
க.குணபாலசிங்கம் குடும்பத்தினர்
(அதிபர்-பளை மத்திய கல்லூரி)

தற்காலிக முகவரி:
*61/2, இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.*

நிரந்தர முகவரி:-
*புலோப்பளை,*
*பளை.* (81124)

## மகிமையில் கிறிஸ்துவோடு 11 ஆண்டுகள்

மண்ணில் 20 - 05 - 1925



மகிமையில் 03 - 12 - 1989

## போதகர் ஜீ.எஸ்.ஏ.ஜோசப்

"நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாள்களாய் நிலைத்திருப்பேன்" (சங்கீதம் 23:6)

உலக வாழ்வினை கர்த்தரிற்குள் வாழ்ந்து - இவ் உலகில் வாழ்வோரை கர்த்தர் வழி காட்டி உன்னதர் இயேசுவோடு 11 ஆண்டுகள் வாழும் போதகர் **ஜீ.எஸ்.ஏ.ஜோசப்** அவர்களின் இவ் உலக வாழ் விற்காய் ஆண்டவருக்கு நன்றிகள் பல.

ஞாயிறு காலை 9.30 மணிக்கு ஆலயத்தில் ஸ்தோத்திர ஆராதனை நடைபெறும்.

*89,பிறவுண் வீதி,*
*கொக்குவில்.* (81134)

**- கல்வாரி குடும்பம்.**

# கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா - பிரதமகுரு

# பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் பவளவிழாச் சிறப்பிதழ்

## சிவசம்பாத்தியமுடைய குருக்கள்

"முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்" என்று பாடியதன் வாயிலாக, இறைவனின் திருமேனியைத் தீண்டிப் பூசை செய்து வருகின்றவர்களின் மகிமையைக் குறிப்பாக எடுத்துக் கூறியிருக்கின்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள். இவ்வாறு பூசை செய்பவர்களிடத்தில் ஒப்பற்ற தெய்வசக்தி குடிகொள்ளும் என்பதினை அன்பர்கள் அனுபவத்தில் கண்டிருக்கிறார்கள்.

இந்தவகையில் முன்னணியில் நிற்பவர் நகுலேஸ்வரத்தில எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் நகுலேஸ்வரப் பெருமானைப் பூசித்து வருகின்ற சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஆவர். குருக்கள் அவர்களை மிகமிக உயர்ந்த இடத்தில் வைத்து மக்கள் போற்றுகிறார்கள்.

தருமத்தின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட சிவசம்பாத்தியமுடைய குருக்கள் ஐயா பவள விழாக்கண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென ஈழத்துச்சிதம்பரப் பெருமானை வேண்டுகனிறேன்.

**சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள்**
ஈழத்துச் சிதம்பரம்.

## உலகெங்கும் சைவ முத்திரை பதித்த குருக்கள் ஐயா

யாழ்ப்பாணத்தில் நகுலேஸ்வரர் திருக்கோயில் மிகவும் அற்புதமும் பழமையும் வாய்ந்தது. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகப் போற்றப்பட்டு வருவது இது. இத்திருக்கோயிலின் பரம்பரை பரம்பரையான சிவாச்சாரியார்களில் இன்று எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் அனைவராலும் போற்றப்படுபவர். அந்தணர்களுக்குரிய விபூதி, உருத்திராட்சம், குடுமி ஆகியவற்றை எந்நேரமும் தனக்குரிய சிறந்த சிவ இலட்சணமாகக் கொண்டவர் ஐயா அவர்கள்.

தாய் மண்ணிலும் சைவத் தமிழர்கள் வாழும் அயல் மண்ணிலும் போற்றிப் புகழப்படுபவர். எமது சைவத்தின் எழுச்சிக்கு இன்று உலகமெங்கும் இவர்கள் பதித்திருக்கின்ற சைவ முத்திரை பெருஞ்சான்றாக அமைகின்றது. வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் இன்று பவளவிழாக் காணும் சிறப்பைப் பெற்றுக்கொள்கிறார். நகுலேஸ்வர தேவஸ்தானம் புதுப்பொலிவு பெற்று எல்லோருக்கும் அருட்கருணை பாலிக்கவேண்டும் என்று சிவபெருமானைப் பிரார்த்திப்பதோடு ஐயா அவர்களின் திருவடிகளை வணங்கி அமைகிறேன்.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா.அப்பாக்குட்டி**

## பல்லாண்டு இனிது வாழ்க!

சிவதொண்டையே தன் வேலையாகக் கொண்டு தற்போது சேதமுற்றிருக்கும் நகுலேஸ்வர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய அல்லும் பகலும் அயராது பாடுபடும் பிரமஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களை அறியாதார் இருக்கமுடியாது.

உலகளாவிய மட்டத்தில் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற அதி உத்தம சிவாச்சாரியாருக்குப் பவளவிழாச் செய்வதை உளமார நேசிக்கின்றேன். குருக்கள் அவர்கள் எல்லா நலங்களும் பெற்றுப் பல்லாண்டு இனிது வாழ வேண்டுமென எல்லாம்வல்ல சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரனை வேண்டுகிறேன்.

**ஈசானசிவ.சி.குஞ்சிதபாதக்குருக்கள்**
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர்
தேவஸ்தானம், கொழும்பு.

## நீடு வாழி!

அழகார்புரி நகுலேஸ்வரர் ஆலயத்தில்
அனுதினமும் பூசைபுனஸ் காரம்செய்தே
சிவனார்பதம் புவியில் கதி என்றேபக்தி
சொரிந்தன்பால் பரவமகிழ் வேதநூலோன்
நகுலேஸ்வரக் குருசேவையைப் புகழ்ந்தே ஏத்தி
நற்பவள விழாச் சபையார் அன்னாருக்கே
நகுலேஸ்வரானுக்ரஹ வித்யாதரர்
நல்விருது தந்தார்குரு நீடுவாழி

**-மகாவித்துவான் ந.வீரமணிஐயர்**

## பல்லாண்டிசைப்பேனே!

அலைகடற் கரையில் ஆதிதொட்டின்றும்
அமர் நகுலேஸ் வரர்தம்மைக்
குலமுறை யேத்திக் கும்பிடுமுறைசேர்
குறையிலா மரபிநன்வழிப்பே
உலகிடும் வேதம் ஆகமந்தவறா
உயர் நகுலேஸ்வரக் குருக்கள்
மலைமெனப் பவளவிழாக் கண்டுபொலிய
மகிழ்ந்து பல்லாண் டிசைப்பேனே.

முதுபெரும் புலவர்
**வை.க.சிற்றம்பலம்.**

## வாழிய நகுலேஸ்வரக் குருக்கள்!

வாழியநம் நகுலேஸ்வரக் குருக்கள் வாழியவே
வாழிய நல்மனை வேதநாயகியார் வாழியவே
வாழியவே நகுலேசுவரர் நாமம் வாழியவே
வாழியவே வண்டமிழும் வையகமும் வாழியவே.

**கவிஞர் வி.கந்தவனம்,** காப்பாளர்,
ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை, கனடா.

மலர் அமைப்பு:
சைவப்புலவர் க.செல்லத்துரை (பவளவிழாச்சபை செயலாளர்)



## வாழ்வுச் சீர்!

| | |
|---|---|
| பிறப்பு | : நகுலேஸ்வர ஆதீன கர்த்தா பிரம்ம ஸ்ரீ தி.குமாரசாமிக்குருக்கள் அவர்களுக்கும், மாவை ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சா.சுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் கனிஸ்ட புத்திரி அன்னம்மாளுக்கும் வாரிசாக 1925 வைகாசித் திங்கள் பூச நட்சத்திரத்தில் பரத்வாஜ கோத்திரத்தில் உதித்தார். |
| கல்வி | : பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில ஆரம்பக் கல்வியையும் நடேஸ்வராக் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றார். |
| குருகுலக்கல்வி | : தந்தையாரிடமும், கீரிமலையில் இயங்கி வந்த சமஸ்கிருத பிராசீன பாடசாலையில் மாதகல் பிரம்மஸ்ரீ ஏரம்பையரிடமும் வேதம், ஆகமம், அமரம், காப்பியம், தர்ம சாஸ்திரம் முதலானவற்றையும் கிரியை நெறிகளையும் பயின்றார். |
| ஆசாரிய அபிசேகம் | : 1946 வைகாசியில் மாவை ஆதீனம் செல்லக்குருக்கள் அவர்களிடம் சிவாச்சாரிய அபிசேகம் பெற்று 'ஈசான சிவாச்சாரியார்' எனும் தீட்சா நாமமும் பெற்றார். |
| ஆதீன கர்த்தா | : 1947 மார்கழியில் தந்தையார் சிவகதிசேர குலாசாரப்படியும் சட்டப்படியும் நகுலேஸ்வா ஆதீனகர்த்தா ஆனார். |
| திருமணம் | : 1947 ஆவணியில் மாவை ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு.துரைசாமிக்குருக்களின் சிரேஷ்ட புத்திரி வேதநாயகி அம்மாளைத் திருமணம் செய்தார். |
| திருப்பணி | : நகுலேஸ்வரத் திருப்பணிகளை மேற்கொண்டு 1953 ஆம் ஆண்டிலும் 1973 ஆம் ஆண்டிலும் கும்பாபிஷேகங்கள் செய்தார். |
| மகோற்சவம் | : நகுலேஸ்வரப் பெருமானுக்கு 1954 ஆம் ஆண்டிலும் நகுலாம்பிகாதேவிக்கு 1961 ஆம் ஆண்டிலும் மகோற்சவங்களை ஆரம்பித்தார். |
| தீர்த்த யாத்திரை | : பலமுறை தென்னிந்திய திருத்தலங்களுக்கும், இருமுறை காசிக்கும் தீர்த்த யாத்திரை செய்துள்ளார். |
| சஷ்டியப்த பூர்த்தி | : 1985இல் ஷஷ்டியப்த பூர்த்தி விழா இடம்பெற்றது. மீண்டும் திருப்பணி, ஈழப் போரின் காரணமாக 1990இல் பாரிய சேதத்திற்குள்ளான ஆலயத்தை 1998ஆம் ஆண்டுமுதல் மீண்டும் புதுப்பொலிவுடன் கட்டி யெழுப்பிக்கொண்டு இருக்கின்றார். |
| பவளவிழா | : 2000 வைகாசிப் பூசத்தில் 75 வயது பூர்த்தியாகிச் சாந்தி ஹோமம் நடைபெற்று இன்று (03-12-2000) ஞாயிற்றுக் கிழமை பவளவிழா நடைபெறுகிறது. |

**திரு.சு.பரமநாதன் அவர்கள்,**
தலைவர், பவளவிழாச்சபை.

## கடல் கடந்து சிவப்பணி ஆற்றியவர்

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானின் திருவடிகளை அர்ச்சிக்கும் வாய்ப்பைப்பெற்ற பவள விழா நாயகனாகிய குருக்கள் ஐயா அவர்கள் இறைபணியில் தம்மை இணைத்து இன்பம் கண்டுகொண்டு இருப்பவர்.

கடல்கடந்த நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று சிவப்பணி ஆற்றியவர்.

1999ஆம் ஆண்டு ஆனிமாதம் ஆஸ்திரேலிய சிட்னி முருகன் ஆலய கும்பாபிஷேகத்தில் எம்மோடு சேர்ந்து சிறப்பித்து ஸ்ரீ மீனாட்சி தேவியின் கும்பாபிஷேகத்தினை நடத்தி அம்பிகை அருள்தந்தவர்.

பல்வகைச் சிறப்புக்களையும் கொண்ட பவள விழா நாயகர் அவர்களைப் போற்றி வாழ்த்தி வணங்குகின்றோம்.

**பிரம்மஸ்ரீ சோமசுந்தர நிர்மலேஸ்வரக்குருக்கள்,** பிரதமகுரு, சிட்னி முருகன் ஆலயம், ஆஸ்திரேலியா.

## எல்லோருக்கும் பெருமை

நகுலேஸ்வரத்தின் பரம்பரைப் பிரதம குருவாகவும் ஆதீனகர்த்தராகவும் பிரமஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள் எம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்பது எல்லோருக்கும் பெருமை தருகிறது. அந்தண குருமார்களின் பாரம்பரிய கல்விமுறையில் கல்விகற்று அதன்படி வாழ்ந்து கொண்டிருப்பவர் குருக்கள் அவர்கள். அவர் சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் செய்யும் தொண்டு எல்லோருடைய சிந்தனையையும் தீண்டுவதாக அமைந்துள்ளது.

குருக்களுக்கு உரித்தான ஆறு அங்கங்களையும் தனக்கு அணிகலனாகக் கொண்டு வாழ்ந்துவரும் குருக்கள் பலலாண்டு காலம் நல்வாழ்வு வாழ இறையாசி வேண்டுகிறோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**
நல்லை ஆதீனம்.

## சிவப்பணி தொடர்க!

இன்று பவளவிழாக் காணும் நீங்கள் சகல சுகங்களுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து உங்கள் சிவப்பணியைத் தொடர எமது நல்லாசிகள்.

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி

என யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகள் கூறியது போல இறைவனே தஞ்சமெனவாழும் யாழ்ப்பாணத்து மக்கள் உங்களுக்குப் பவளவிழா எடுப்பது சைவ சமயத்துக்கும் சிவாச்சாரியார் குலத்துக்கும் கிடைக்கும் கௌரவமாகும்.

**குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்,**
குவை.சைவ ஆதீனம், ஐக்கிய அமெரிக்கா.

## வெளிநாடுகளில் பாராட்டப்பட்டவர்

தனது தந்தையாரிடம் வேதாகமங்கள் மற்றும் கோயில் கிரியை முறைகளைக் கற்றுக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகக் கீரிமலைச் சிவனுக்குச் சிறப்பான முறையில் பூசை வழிபாடுகளை நடத்திவரும் பிரமஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் இலங்கையில் மட்டுமல்லாது லண்டன், ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா போன்ற நாடுகளிலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவர்.

குருக்கள் ஐயா அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் தொண்டு செய்ய அவரை வாழ்த்துமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**
தலைவர், கொழும்பு
இராமகிருஷ்ணமிஷன்.

## ஞாயிறு போல் வாழி!

ஓங்கு நகுலேஸ்வரரின் எழுபத்தைந்தாண்(டு)
உற்றதினம் உலகெலாம் அன்னாருக்குப்
பாங்குமிகு பாராட்டுப் புரியக் கண்டு
பத்திவெள்ளத் தேமகிழ்ந்து போற்றுகின்றோம்
தாங்குசுகம் சந்தானம் செல்வமோங்கி
தம்பலேஸ்வரன் கோயில் புதுமையோங்கி
தேங்குபுகழ் நகுலேஸ்வரக்குருக்கள்
சிவந்தகலை ஞாயிறுபோல் வாழி வாழி

**அருட்கவி.சீ.விநாசித்தம்பி**

## இந்நெறியே தொடர்க!

ஆன்மீக வழிகள் செழிக்க வேண்டும் உலகம் உய்ய வேண்டும் என்ற நோக்குடன் சிவபூசையினை நித்தமும் ஆலயங்களில் செய்தும் செய்வித்தும் வரும் சிவாச்சாரியாராகச் சிவபெருமானால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களது வாழ்க்கை இன்னும் பல்லாண்டுகள் இந்நெறியே தொடர இறையருள் அமையவேண்டும் என வணங்கி வாழ்த்துகின்றோம்.

**திரு.சதாசிவம் ஆனந்தத்தியாகர்**
கௌரவ பொதுச் செயலாளர்
சைவமுன்னேற்றச் சங்கம், லண்டன்.

## தமிழ் கூறும் நல்லுலகுக்கே பெருமை சேர்த்த ஐயா!

மக்களின் ஆத்மீக வள்ளலாய், அறங்காவலனாய், தமிழர் தம் பாரம்பரியத்தின் வாரிசாய், சேவைகளின் செம்மலாய் திகழ்ந்துவரும் குருக்கள்ஐயா அவர்கள் பூமகள் மடியில் தவழ்ந்து பூமகள் தன் குடும்பக் கிரகங்களோடு அறுபது ஆண்டுகள் ஒருபெருவட்டச் சுழற்சியை நிறைவுசெய்து மேலும் பதினைந்து ஆண்டுகள் ஐயாவை பூமகள் எனும் தேரினில் ஏற்றிய வண்ணம் சுழல்கிறாள். பூமகள் ஏற்றிச் செல்லும் அறுநூறு கோடி மக்களில் தனக்கெனத் தனியிடம் தக்கவைத்த ஐயா தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் பெருமை தேடித் தருகிறார்.

ஐயா அவர்கள் எழுபத்தைந்து ஆண்டுகளில் சாதித்தவை பல சந்ததிகளால் சாதிக்கக் கூடியவை. கனடா வாழ் சைவத் தமிழர் சார்பில் எமது பணிவன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**- திரு.சாமி.அப்பாத்துரை, தலைவர்,**
ரொரன்ரோ தமிழர் பண்பாட்டு நிலையம், கனடா.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்குண்டு

YAMAMHA V90T மோட்டார் சைக்கிள்-ஜப்பான் விற்பனைக்கு உண்டு. தனிப்பாவனையிலும் மிகவும் உன்னதமான நிலையிலும் உள்ளது. நேரில் பார்வையிடலாம். தொடர்பு:- 'சரஸ்வதி வாசா', சின்னப் பிள்ளையாரடி, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை. (81038)

எம்மிடம் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள் ANKUR (Hero-Majestic) நியாயமான விலையில விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 190, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (81120)

டீ பிறீசர் HONDA மின் பிறப்பாக்கி (650w), LP. GAS இலும் மின் சாரத்திலும் இயங்கும் காஸ்குக்கர் ஆகியன விற்பனைக்குண்டு. ஓம் சரவணபவ, ஆலங்கட்டை, பொலிகண்டிவீதி, கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை. T.P : 070-212616. (81006)

மிகவும் நல்ல நிலையிலுள்ள நிசான் ஸனி 17 sri வெள்ளை நிறக் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: உடுவில் வீதி, மானிப்பாய் (வைத்தியசாலைக்கு அருகில்). (81140)

கடைப்பாவனைக்குரிய முதிரை மரத்தினாலான இரண்டு பெரிய றாக்கைகள் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்பு: 'சரஸ்வதி வாசா', சின்னப் பிள்ளையாரடி, விநாயமுதலியார் வீதி, பருத்தித்துறை. (81037)

நல்ல நிலையிலுள்ள மிக்சர் கண்ணாடி வண்டில் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.மகேந்திரன், 140, அரச வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (81165)

நல்ல நிலையிலுள்ள L.M.L. Vespa sellect விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.07, டச்சு வீதி, உடுவில். (81166)

சிறந்த பாவனையில் இருந்த நல்ல நிலையிலுள்ள சுப்பகப்-90 லான்சர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.81, தவடி மானிப்பாய் வீதி, தாவடி (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில்). (81155)

## தேவை

ஆங்கில அச்சுக்கோப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 14034)

## வீட்டுடன் காணி உடன் விற்பனைக்கு

சுதுமலையில்,மானிப்பாய் தாவடி வீதிக்கு மிக அண்மையில் பயன் தரும காணியுடன் கூடிய சகல வசதியுள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப. சுந்தரலிங்கம், 'பசுபதாபதி', சுதுமலைமத்தி, மானிப்பாய். (80172)

## ஆடுகள்விற்பனைக்கு

நல்லஇன ஜமுனாபாரி ஆடுகள், மறிக்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை(நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (81138)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ALSATION நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசா ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (81139)

## இறைச்சிக்கோழி விற்பனை

BROILER மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (81137)

## O/L ENGLISH MODEL PAPER WITH ANSWERS

மார்கழி 2000 மாதத்திற்கான பரீட்சார்த்திகளுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் அனைத்து இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். K. சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (81073)

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய உத்திராடம் 2இலசெவ்வாய 41பாவமுள்ள B.Sc. கெமிஸ்ரி ஆசிரியைக்கு கல்வித் திறமையுள்ள மணமகன் விரும்பத்தக்கது. வெளிநாட்டு, உள்நாட்டு சாதகங்களும் எம்மிடம் உண்டு. தொடர்பு: முருகன் திருமண சேவை, செ.விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (81131)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்வராசா உமாதேவியின் தே.அ.அ.(இல.565931903v) விசேட அ.அ.(இல.091048706)என்பன 26.11.2000 அன்று சுதுமலைக்கும மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மானிப்பாய் யாழ்.வீதயிலுள்ள திருப்பதி தொலைத்தொடர்பு நிலையத்தில(T.P.No 021-2757) கொடுத்து உதவவும். (81164)

நல்லையா சிவகுமார் ஆகிய எனது கைச்சங்கிலி (பவுண்) நாச்சிமார் கோயிலடிக்கும் யாழ்.ஆஸ்பத்திரிக்குமிடையில் 30.11.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/14111)

## ENGLISH CLASSES

G.A.Q, B.A. மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாள்களில் இரு பிரிவாக நடைபெறுகின்றன. ஆசிரியர்: K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (81074)

## செவ்வாய் மாற்றம்

(16-12-2000 - 07-02-20001 வரை) யுத்தச் செவ்வாய் வக்கிர நீசச் சனியையும், வக்கிர வியாழனையும் நோக்குவது நாட்டுக்கு நன்மையல்ல குரு, சனி வக்கிரங்கள் எங்கும் விற்பனையாகின்றன. 'சத்யா' (ஜோதிடம் நூலாசிரியர்), ஆனைக்கோட்டை. (81172)

## வீடு வாடகைக்குண்டு

தூர இடத்தைச் சேர்ந்த மாணவிகள், தொழில் புரியும் பெண்களுக்கு வீடுகள், அறைகள் சகல வசதிகளுடனும் (தொலைபேசி வசதியுட்பட) யாழ். நகரின் பாதுகாப்பான பகுதியில் உண்டு. விரும்புவோர் தங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1150, மே/பா உதயன் (81171)

## இறைச்சிக்கோழி

கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம்.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (81132)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சங்குவேலி வடக்கு

## செல்வன் க.சர்மிளன்

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த **கணேசலிங்கம்~விஜயகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சர்மிளன்** தனது முதலாவது பிறந்த நாளை இன்று [03. 12. 2000.] ஞாயிற்றுக் கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

சர்மிளன்குட்டியை அப்பா, அம்மா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, சண் சித்தப்பா, பாட்டா, அபுதாபியில் வசிக்கும் அத்தை, மாமா, அம்மப்பா, அம்மம்மா, சிறிசித்தி, ஜேர்மனியில் இருக்கும் குமார் மாமா மற்றும் உறவினர்கள் அனைவரும் எல்லாம் வல்ல முருகப் பெருமான் அருளால் சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*டச் றோட்,*
*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*

*- குடும்பத்தினர்.*

(81086)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான பரிபாலனசபை பிரதித் தலைவர்

**திரு. நன்னித்தம்பி இராசரத்தினம்**

**அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமை குறித்து எமது சபையினர் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

*சுன்னாகம்.* (81150)

***பரிபாலன சபை,***
***ஐயனார் தேவஸ்தானம்.***

# பாராட்டி வாழ்த்துகிறோம்.

## நன்னித்தம்பி இராசரட்ணம் J.P

(உரிமையாளர் - நாகம்ஸ் பாட்டா, நாகம்ஸ் தியேட்டர்)

சிறந்த சமூக சேவையாளரும், பிரபல வர்த்தகருமாகிய **உயர்திரு. நன்னித்தம்பி இராசரட்ணம்** அவர்கள், நீதி அமைச்சினால் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகிறோம். அன்னார் எமது யா/நாகேஸ்வரி வித்தியாசாலைக்கு செய்த தொண்டு போற்றுதற்குரியது. அன்னாரின் சேவை மென்மேலும் தொடர இறைவனை வேண்டுகின்றோம்.

**லயன் வி.எஸ்.சிவரட்ணம்**
குடும்பத்தினர்.
ALL-ISLAND.J.P
மதிப்பீட்டு உத்தியோகத்தர்,
இலங்கை வங்கி மதிப்பீட்டாளர்,
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (81064)

# பவளவிழா வாழ்த்துக்கள்



## பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்

அவர்களின் பாதம் பணிந்து போற்றுகின்றோம்

எழுபத்தைந்தாவது அகவை பூர்த்தி பெறுகின்றபோது புதிய பட்டத்தையும் பாராட்டையும் பெறும் எங்கள் குருக்கள் ஐயா தம்பதிகளை மிகுந்த மன மகிழ்வுடன் வாழ்த்தி வணங்குகின்றோம்.

**தெல்லிப்பழை**
**இந்து இளைஞர் சங்கம்.**

(81158)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ விக்கிரம வருடம் கார்த்திகை மாதம் 25 ஆம் நாள் (10-12-2000) ஞாயிற்றுக்கிழமை பூரணை திதியும், மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மாலை 5.11 மணிமுதல் 6.15 மணிவரை அமைந்துள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

திரு.திருமதி தேவராஜா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன்
**சுரேந்திரன்** (சுரேன்)
அவர்களுக்கும்

திரு.திருமதி சேனாதிராசா தம்பதிகளின கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி
**சுகந்தினி** (சுகந்தி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வைபவ மண்டபம்:
**அல்ப்பேட்டன் சனசமூக பாடசாலை,**
**ஸ்ரான்லி அவென்யு, வெம்பிளி, மிடில்செக்ஸ்.**
*தங்கள் நல்வரவை நாடும்:*

திரு. திருமதி தேவராஜா
திரு. திருமதி ஜெயச்சந்திரன்
34, சந்தனமாதா கோயில் ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு, அரியாலை,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி சேனாதிராசா
திரு. திருமதி சுகுமார்
திரு. திருமதி கிருஸ்ணகுமார்
திரு. சே. சந்தர்
**61/31, st.Rita's Road,**
**Mountlavinia.**

இருவீட்டார் அழைப்பு

(81148)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## விசேஷ அறிவித்தல்

அன்பார்ந்த பொதுமக்களே!

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய திருப்பணி நிதி என்ற பெயரில் ஏமாற்றுப் பேர்வழிகளால் போலியான ரிக்கெட்டுக்கள் அச்சிட்டு பாடசாலைகள் ஊடாகவும், பொது இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருவது கண்டு பிடிக்கப்பட்டு, எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறான திருப்பணி நிதி வசூலுக்கும் எமது ஆலயத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை தெளிவுபடுத்துகின்றோம்.


**அன்பர்கள் எவராவது விரும்பிக் கொடுத்தாலொழிய எக்காலத்திலும் மேற்படி ஆலய அறங்காவலர் சபை பொதுமக்களிடம் ஆலயத் திருப்பணிக்காக நிதி வசூல் செய்வதில்லை.**

மேற்படி இந்த ஆலயத்தின் சார்பில் நிதி வசூல் செய்பவோ, பொருள்கள் சேகரிக்கவோ அறங்காவலர் சபை எவருக்கும் அனுமதி வழங்கவுமில்லை. எனவே இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு அன்பர்கள் அனைவரையும் மிகவும் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். இந்த ஆலயத்தின் பெயரால் பொதுமக்களிடம் போலி வேடம் பூண்டு திருப்பணி நிதி வசூல் செய்வதில் சம்பந்தப்பட்டுள்ளவர்களை ஆலயத்தின் சார்பில் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அன்னையின் சேவையில்
சி. பரராசசிங்கம்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதிவு

(சி-12108)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### கணபதிப்பிள்ளை இராசையா

(சைவப் புலவர், இளைப்பாறிய ஆசிரியர், யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

மலர்வு 1934-01-03 உதிர்வு 1998 11-25

பண்பிலே தெய்வமாய் பாரினில் வாழ்ந்தவரே!
அன்புக்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்தவரே!
மண்ணை விட்டு நீர் மறைந்தாலும்
உம்மை என்றும் உள்ளத்தில் மறவோம்.

குடும்பத்தினர்.

ஸ்ரீமஹால்,
கரவெட்டி வடக்கு, வதிரி.

[80859]

## உளவியல் சஞ்சிகை

யாழ்ப்பாணம், டிசெ. 3

குடாநாட்டில் வெளிவரும் நான் உளவியல் சஞ்சிகையின் நவம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது

இலங்கையில் தமிழில் வெளியிடப்படும் ஒரேயொரு உளவியல் சஞ்சிகை இதுவாகும்.

(இ-6)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 3

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் தினமும் ஆரம்பக்கல்விச் செயற்பாட்டறையின் திறப்பு விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் எஸ் கே சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தீவகக்கல்வி வலயப் பணிப்பாளர் ப விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-7)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குக் கடமையாற்றும் பாட்சைப் பணிக்குழு உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர் வரும் ஆறாந் திகதி புதன் கிழமைகாலை10.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் யில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள்,பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள் துள்ளார்.

வலயத்தைச் சேர்ந்த உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், நிலைய மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், சாதாரண நோக்குநர்கள் ஆகியோருக்கான செயலமர்வு எதிர்வரும் பத்தாம் திகதி காலை 9 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப் பட்டது.

(இ-117)

## தேவை

கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத்துக்கு நித்திய பூசை செய்வதற்கு

### ஒரு பூசகர் தேவை

ஆலயத்தில் நிரந்தரமாகத் தங்கி இருக்க வேண்டும்.
தங்குமிடவசதி உண்டு.
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்,
கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:
ச. சிவகுமாரன் (தலைவர்)
"அமுத சுரபி", கட்டுடை, மானிப்பாய்.

(81170)

## விற்பனையாகின்றன

நல்லின குறோட்டன்ஸ் (பெரியது)
ஒட்டு றோஸா, ஒட்டு செவ்வரத்தை
மற்றும் நல்லின பூக்கன்றுகளும்
குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய
ஒட்டுத்தோடை (மஞ்சள்), ஒட்டுத் தேசி
ஒட்டு மாங்கன்று மற்றும் பயன் தரும் கன்றுகளும்
விற்பனைக்கு உண்டு
வாடிக்கையாளர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

### நியூ லங்கா பாம்

கே. கே. எஸ். வீதி, இணுவில் கிளை (ஊரெழு).

(81174)

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியானந்தேஸ்வரி விமலேந்திரன்

(இளைப்பாறிய ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியானந்தேஸ்வரி விமலேந்திரன் கடந்த வெள்ளிக்கிழமை (1 - 12 - 2000) இந்தியாவில் காலமாகிவிட்டார்.

இவர் கனகரத்தினம் விமலேந்திரனின் அன்பு மனைவியும் (Vims) சயந்தி (லண்டன்), மிஹிறா (இந்தியா), சத்தியேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஸ்ரீரதன் (லண்டன்), சுரேஷ் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஷன், தனுஷன் (லண்டன்), தர்ஷன் (இந்தியா), அக்னிஷா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 1-12-2000 அன்று இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நிருபா அருணாசலம்,
(மைத்துனி)

இல. 1, முதலியார் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி/14110)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப் பட்டிருக்கும் வேலைகளுக்கு தகுதியானவரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் பெறுதல்:- 08—12—2000 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் சமர்ப்பித்தல்:- 11—12—2000 முற்பகல் 11 00 மணி வரை
கேள்விகள் திறத்தல் :- 11—12—2000 முற்பகல் 11 30 மணி

மேலதிக விவரங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொட.இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | மணியகாரன் தோட்டப் பாடசாலை வீதி புனரமைத்தல் | 1000/- | 250/- |
| 02. | ஸ்ரீநாரதா பாடசாலை வீதி புனரமைத்தல் | 1000/- | 250/- |
| 03 | கோவிற்சந்தை, பைசிக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைத்தல் | 200/- | 100/- |

வ. நடராஜா ஜே.பி.
தலைவர்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி/14113)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் கந்தசாமி

(மிருதங்க வித்துவானும், பொலிஸ் உத்தியோகத்தரும்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கந்தசாமி அவர்கள் (மிருதங்க வித்துவானும், பொலிஸ் உத்தியோகத்தரும்) 30 - 11 - 2000 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணிதேவியின் (வவுனியா) அன்புக் கணவரும், சிறீஜெயமோகன் (ஜேர்மனி), மனோகரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சிகா (வவுனியா), துவர்ணியா (வவுனியா), கிருஷிஜா (வவுனியா) ஆகியோரின் பேரனும், மகேந்திரன் (வவுனியா), திருமதி சிறீஜெயமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. நவமணி
(மச்சாள்)

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(81188)

## செல்வி மகேந்திரன் மாரதி

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பைவதிவிடமாகவும் கொண்டவராகிய செல்வி மகேந்திரன் மாரதி 1-12-2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேந்திரன்- வனஜா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் பார்பதிப்பிள்ளை, பரஞ்சோதி, பத்மாவதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வாரணியின் அன்புச் சகோதரியும் சந்திரலிங்கம் கிரிஜா (சுவீஸ்), அருணகிரிநாதன், விஜயரூபி (சுவீஸ்), உதயரூபி (கொழும்பு) ஆகியோரின் பெறாமகளும், ரதிரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார் .

அன்னாரின்இறுதிக்கிரியைகள் 3-12-2000 கொழும்பில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:
க. சேரமு

45/8, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி/14118)

## கதிரன் செல்லையா

(ஓய்வூதியர், யாழ். மாநகர சபை)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் செல்லையா நேற்று (2-12-2000) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நவமணிதேவியின் அன்புக் கணவரும் சண்முகலிங்கம் (எழுதுவினைஞர், மோட்டார் பதிவுத் திணைக்களம், கச்சேரி, யாழ்.), தங்கராணி, சண்முகரெட்ணம் (கனடா), விக்னேஸ்வரி (யா/இந்து மகளிர் கல்லூரி), தனலட்சுமி, கோமதி (யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகநாதன், யமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும் நவநீதா, நவறூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 1-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகலிங்கம்
(மகன்)

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
(81201)

## நல்லதம்பி சோமசுந்தரம் (சோமு)

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சோமசுந்தரம் (29- 11- 2000) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் நல்லதம்பி - தங்கச்சியம்மாவின் அன்பு மகனும், உதயமலரின் அன்புக் கணவரும், தருமலிங்கம்—சரஸ்வதியின் மருமகனும், பிரகாஷ் (கனடா), பிரதீபன், பிரதாஸ், பிரசாந், யசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, பூலோகம், பரமேஸ்வரி, அருணகிரி, சந்திரபாலன், தனபாலன் (சுவிஸ்), ஜெயபாலன் (பிரான்ஸ்), சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலிங்கம், நடராசா, சிவானந்தன், இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராசமலர், தயாபதி, சிவரஞ்சினி, திருமதி உதயராணி பஞ்சலிங்கம், திருமதி உதயரோசா சுந்தரலிங்கம் (கனடா), திருமதி உதயரஞ்சிதமலர் சிறி (கனடா), திருமதி உதயரஞ்சிதம் சிவலிங்கம் (கனடா), உதயகுமார்—வனஜா (சுவிஸ்), உதயரஞ்சன்—றஜு (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3- 12- 2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டைக்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(81203)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம். டிசெ. 3

உரும்பிராய் மேற்கு அன்னங்கை இளைஞர் சனசமூக நிலைய கனிமொழி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் ஒரு மணிக்கு சனசமூகநிலையத் தலைவர் சீ ஞானசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் செ. குகதாசன் கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ் சிவன் பாலர் பாடசாலையின் முன்பள்ளிக் கல்வி நிலைய மாணவர்களின் முதலாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1-30 மணிக்கு வைத்தீஸ்வராக்கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி நிலையப் பொறுப்பாளர் செல்வி மீனலோஜினி தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் மற்றும் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். (இ-7)

★ ★ ★

சுன்னாகம் அசெம்பிளி ஒவ் கோட் நடத்தும் ''கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக'' என்ற தலைப்பிலான ஆராதனை ஒன்று இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-7)

★ ★ ★

வண. நாவலர் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் ஐ. துரைராஜாவின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ந. சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உருவப்படம் திரை நீக்கம், அஞ்சலியுரைகள், ஆசியுரைகள் என்பன இடம்பெறும்.

பிரார்த்தனை யுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். (இ-7)

★ ★ ★

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10-30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா தொடர்பாகக் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/75, ஜே/76, ஜே/81, ஜே/82 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய இடம்பெயர்ந்தோருக்கான 2 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு எதிர்வரும் 5 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நக்கா வீதியில் அமைந்துள்ள தையல் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெறவுள்ளவர்கள் தத்தமது பிரிவுக் கிராம சேவையாளரிடம் பெற்ற உரிய அத்தாட்சியுடன் வங்கிப்புத்தகம், தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வரும்படி பிரதேச செயலர் பா. செந்தில்நந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-ஒ)

# அனுமதி அட்டைகளைப்பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம். டிசெ. 3

எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலய (ஜி. சீ.ஈ. சாதாரணதர) மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் தமது அடையாள அட்டைகளுடன் நேரில், உரிய இடங்களுக்கு வருமாறு அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (இ-ஒ)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் செல்லத்துரை

தம்பாளை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 5/4 சீவாலி லேன், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் செல்லத்துரை நேற்று (2 - 12 - 2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லாச்சியின் அன்புக் கணவரும், சோதிலிங்கம் (டென்மார்க்), பவளம் (வத்தளை), சரஸ்வதி (கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (வத்தளை), சுந்தரலிங்கம் (கோண்டாவில்), தவம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (3 - 12 - 2000) இன்று ஞாயிற்றுக்கிழமை வத்தளை சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
சோ. சுந்தரலிங்கம்
(மருமகன்)

''திருப்பதி இல்லம்'',
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(81202)

## நரசிங்கம் பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர்)

கருகம்பனை வத்துவானைப்புலத்தைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கம் பொன்னுத்துரை அவர்கள் நேற்று சனிக்கிழமை (02 - 12 - 2000) சிவபதமெய்தினார்.

அன்னார் நரசிங்கம்- சின்னத்தங்கம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு, இராசையா, நடராசா, செல்வம், செல்லத்துரை, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சின்னத்தம்பி, பாலசிங்கம், அருமைநாயகம், அருள்சோதிநாதன், மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03 - 12 - 2000) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு குடும்ப இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. அருள்சோதிநாதன்
(மைத்துனர்)

கம்பலைவளவு,
பன்னாலை.
(81206)

## திருமதி செல்லத்துரை தங்கரெத்தினம்

வேலணை 5 ஆம் வட்டாரம் மணியகாரன் வீட்டடியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சுவீஸில் வசித்துவந்தவருமான திருமதி செல்லத்துரை—தங்கரெத்தினம் சுவீஸில் 30-11-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா—இராசம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியாரும் காலஞ்சென்ற வைத்தியநாதர்—பர்வதம் தம்பதிகளின் மருமகளும் அன்னலிங்கம் [கனடா], தனபாலசிங்கம் [சுவீஸ்], தயாநிதி [கொழும்பு], பிறேமாமலர் [சுவீஸ்], ஸ்ரீகாந்தி [சுவிஸ்], நவநீதன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் அ. தனலெட்சுமி [கனடா], த. றுக்குமணிதேவி [சுவீஸ்], இரத்தினராசா [காலி வர்த்தகர்], சண்முகநாதன் [சுவீஸ்], நவநாதன் [சுவிஸ்], சறோஜினி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் [C. O. ] மற்றும் திருநீலகண்டன், திலகவதி [இந்தியா], காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் நாகரெத்தினம் [கனடா], யோகவதி [ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி], இராசலிங்கம் [ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்], சுந்தரலிங்கம் [கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலணை பிரதேச செயலகம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாக்கியலெட்சுமி மற்றும் பாக்கியலெட்சுமி [பேரின்பவதி] நாகலிங்கம், நவீனச்சந்திரன் [பிரான்ஸ்], இன்பநாயகம் [கனடா], காலஞ்சென்ற யோகரெத்தினம் மற்றும் கேதாரஈஸ்வரி, பரமேஸ்வரி [ஆசிரியை, கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்] காலஞ்சென்றவர்களான சிவசம்பு, முத்தையா ஆகியோரின் மைத்துனியும் சயந்தன், மகிந்தன், கஜந்தினி, சிந்துஷா, சைலஷா, நந்தியன், நந்திஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் [11—12—2000] திங்கட்கிழமை சுவீஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சுந்தரலிங்கம் (சகோதரன்)
[கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்]

49,ஸ்ரேசன் றோட்,
கொக்குவில்.
[81198]

# உதயன்

## ரணிலின் ஆலோசனை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய சமாதானப் பேச்சுக்களுக்கான காலம் கனிந்து வரும் அறிகுறிகள் தென்படுகின்றன. அது குறித்து நம்பிக்கை தரக்கூடிய செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் தடங்கலோ, தடையோ இன்றி முன்னெடுக்கப்பட்டுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமெனில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேசி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவது எத்துணை அவசியமோ —

மேற்கண்ட இரு சாராரும் காணும் முடிவை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்க வேண்டியதும், அதே அளவு முக்கியமானது ஆகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் முதற்கட்டம் அரசும் விடுதலைப் புலிகளும் பேசி இணக்கத்துக்கு வரும் நிலை. ஐக்கிய தேசியக் கட்சி அந்த இணக்கத்துக்கு — தீர்வுத்திட்டத்துக்கு — ஒத்துழைப்பு நல்குவது இரண்டாவது கட்டமாகும்.

தீர்வுக்கான முயற்சிகளின் போது, அரசாங்கத்துக்கு வெளியே உள்ள பேரினவாதிகள் பிரதான எதிர்க்கட்சியை உந்தித் தள்ளி முன்னுக்கு விட்டு அந்த முயற்சிகளுக்குத் தடை போடுவது தான் இன விவகாரத்தில் கடந்த கால அனுபவம்.

இம்முறையும் அவ்வாறு இல்லாமல் சமாதான முயற்சிகள் சுமுகமாக நடைபெற்றுக் காரியம் தடங்கலின்றி நடைபெற வேண்டுமானால், ஐக்கிய தேசியக் கட்சியின் பங்களிப்பு மிகமிக இன்றியமையாததாகும். அரசமைப்புச் சீர்திருத்தம் என்ற பெயரில் சந்திரிகாவின் முந்திய அரசு கொண்டு வர முயற்சித்த அதிகாரப் பரவல் திட்டத்துக்கே ஐக்கிய தேசியக் கட்சி மனப்பூர்வமாகவோ, முழு அளவிலோ ஒத்துழைப்பு நல்கவில்லை. பௌத்த மதகுருமாரின் எதிர்ப்பை அனுசரித்துத் தானும் பின்னால் ஒதுங்கிக் கொண்டது. மீண்டும் அவ்வாறு செயற்படலாகாது.

சமாதானத்தை உண்டாக்குவதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அரசாங்கத்துக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார். அந்த நேசக்கரத்தைப் பற்றி, சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அரசாங்கம் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சுக்கான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் — என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்த வற்புறுத்துதல் — ஆலோசனை — மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசு அதற்குச் செவிமடுத்து உரிய அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று நாமும் வலியுறுத்துகிறோம்.

அரசுக்கு யோசனை கூறியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், முந்திய எதிர்க்கட்சித் தலைவர்களைப் போலன்றி, நேர்மையுடனும், தீர்க்க தரிசனத்துடனும், நாட்டு நலன் கருதும் தலைவராகச் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

அரசாங்கங்கள் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலும் போது, அப்போதைய எதிர்க்கட்சி தடை போடும் இலங்கையின் கறை படிந்த அரசியல் வரலாற்றை ஐ. தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாற்றி அமைக்க வேண்டும். செய்வாரா?

# எளியோர், துயருறுவோர் ஊடாக இறைவன் அறிமுகமாகின்றார்

தன்னலமற்றதும், பிறர் நலத்தை அடிப்படையாகக் கொண்டதுமான வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வின் அடிப்படையில் இருந்து தொடங்குகிறது. கண்ணீருடன் காலம் கழித்த அங்கவீனர்களையும், வேதனையில் துவண்டிருந்த மாந்தர்களையும், இழப்புக்களால் வாடிய ஆதரவற்றோரையும் தேடிச் சென்று பணியாற்றிய கிறிஸ்துவின் பணி, அப்பணிக்காக எம்மையும் அழைக்கின்றது.

ஒருவருடைய வேதனையை அவரது சொற்களை ஆர்வத்துடன் கேட்பது மூலம் ஓரளவேனும் குறைத்து விடலாம் என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். எமது குறைகளை, வேதனைப் பெருமூச்சுக்களைப் பகிர்ந்து கொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே எனும் ஆறுதலில் சிறிது மன நிம்மதியைச் சம்பந்தப்பட்டவர் அடைந்து கொள்ளவாய்ப்புண்டு. நம்மில் எத்தனைபேர் மற்றோரது வேதனைக் குரல்களை ஆர்வமுடன் கேட்பதற்குத் தயாராக உள்ளோம்? பொறுமையின் சின்னங்களாக வாழவேண்டிய நாங்கள், பொறுமை இழந்தவர்களாக எவ்வளவு முறை தடம் பிறழ்ந்து போயுள்ளோம்?

மற்றவர்களது கண்ணீரை, வேதனையைப் பகிர்ந்து கொள்ளாத நாம் எவ்வாறு மற்றவர்கள் எமது வேதனையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்க முடியும்?

சிலர் நினைப்பது என்னவெனில், துயருற்றோருக்கு ஆறுதல் சொல்வது எல்லோருக்கும் இயலாது, அதற்குப் பயிற்சி தேவை, அது ஒரு தாலந்து என்பதாகும். இந்த நினைப்பு சரியல்ல. துயருற்றோருக்கு ஆதரவு சொல்வதற்கு தாலந்து தேவையில்லை துன்பத்துடன் வாடுவோருக்கு அருகில் சிறிது கணம் இருப்பதே, அல்லது அவர் சொல்வதை ஆதரவுடன் கேட்பதே அன்னாரது கவலையை சிறிதளவாவது நீக்கி விடும் என்பது உளவளப்பணி செய்வோரது கூற்றாகும். எனவே எம் ஒவ்வொருவராலும் இப்பணியில் ஈடுபட முடியும் என்பது நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

பிரசங்கி தனது நூலில் குறிப்பிடுகிறார் ''திருமண வீட்டுக்குச் செல்வதிலும் பார்க்க சாவு வீட்டுக்குச் செல்வது நல்லது. ஏனெனில் ஒவ்வொருவரது இறுதி முடிவையும் அங்கு அறியலாம்'' எனவே எமது நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் உலகில் நிரந்தரமாக சீவிக்கப்போவதில்லை. எனவே நாம் வாழப்போகும் இக்குறுகிய காலத்துள், எத்தனைபேரது துன்பச் சுமைகளை இறக்கி வைக்கப்போகிறோம். எத்தனை பேரது துயரங்களை நாம் பகிர்ந்து கொள்ளப் போகிறோம்?

மத்தேயு 25: 31–46 ஆம் வசனங்களை வாசித்துப் பார்ப்போமெனில் 'மிகச் சிறியராகிய (எளியவராகிய) இவர்களுள் எவர்களுக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்; எதைச் செய்யாமல் விட்டீர்களோ, அதை எனக்கே செய்யாமல் விட்டீர்கள் என மானிட மகன் கூறுவதாக இயேசு கூறுகிறார். எனவே இறைவன் எளியோருக்கு உதவுவதை தனக்கே உதவுவதாகக் கூறுகிறார். நாம் எந்த நிலையில் இருந்தாலும், இறங்கி வராவிடில் இறை தரிசனத்தைக் கண்டுவிட முடியாது. ''பனைமரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல்'' என்ற பழமொழிக்கேற்ப, பாதிக்கப்படுகின்றவர்களது கவலைகளை இன்னும் இன்னும் கூட்டுபவர்களாகத்தான் நாம் பல வேளைகளில் இருந்து விடுகிறோம். திருப்பித்தாக்க முடியாத, வாய் திறக்க முடியாதவர்களிடத்தில்தான் நாம் நமது பலத்தைப் பிரயோகிக்கிறோம். ஆனால் இறைவன் மிதிபடுபவரிடம் தான் உள்ளார். மிதிப்பவரிடத்தில் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏக்கப் பெருமூச்சுக்களுடன் கண்ணீருடனும் கம்பலையுடனும் எமது, பலரது வாழ்வு தடம்புரள்கிறதல்லவா? எமது கவலைகளைப் பகிர்ந்து கொள்ள ஒருவரும் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு எம் பலருள் இருந்து வாட்டுகிறதல்லவா? கண்ணீரைத் துடைத்தெறிவோம், ஏனெனில்

அருள்திரு
**பி. தேவதாஸ்**

இறைவன் எளியோர், துயருறுவோர் ஊடாகத்தான் அறிமுகமாகிறார்.

எமது வாழ்வு எவ்வாறு உள்ளது. துயர் கொடுப்பவராகவா, துடைப்பவராகவா நாம் உள்ளோம். ஏக்கப்பெருமூச்சுக்களை ஏற்படுத்துபவராகவா, நீக்குபவராகவா நாம் உள்ளோம்? எமது பதிலில் தான் இறைவன் எம் அருகிலா, தூரத்திலா என்பதற்கான பதிலும் தங்கியுள்ளது. ★

# ஊனமுற்றோருக்கு நல்வாழ்வளிக்க இன்று உறுதி எடுத்துக் கொள்வோம்

டிசெம்பர் மாதம் மூன்றாம் நாளாகிய இன்று அகில உலக ரீதியில் ஊனமுற்றோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. உடலும் உள்ளமும் கொண்டவனே மனிதன், மனோநலம் மாத்திரமன்றி உடல் நலமும் பேணப்படல் வேண்டும்.

சிலர் பிறக்கும் போது செவிப்புலனற்றவர்களாகவும், விழிப்புலனற்றவர்களாகவும், வாய்பேச இயலாதவர்களாகவும், வலதுகுறைந்தவர்களாகவும், இன்னும் பலவிதமான குறைபாடுகளுடனும் பிறந்து விடுகிறார்கள்.

பூரணசுகதேகியாகப் பிறந்தவர்களும் போலியோ, பாரிசவாதம், நீரிழிவு போன்ற நோய்களினாலும், மரம் போன்றவற்றிலிருந்து தவறி விழுவதாலும், கண்ணிவெடிகள், மிதிவெடிகள், குண்டு வெடிப்புக்கள், எறிகணை வீச்சுக்கள், வாகன விபத்துக்கள் ஆகியவற்றாலும் ஊனமடைந்து விடுகின்றார்கள்.

இவ்வாறு ஊனமுற்ற மனிதர்களின் வாழ்வு வீதி ஓரங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், ஆலயமரத்தடிகள், ரயில்நிலையங்கள் என்பவற்றில்தானா? அவன் உழைப்பு அடுத்தவரை தொந்தரவு செய்து யாசகம் கேட்பதுதானா? உயிர் இருக்கும்வரை அவன்வாழ்வே அவனுக்குச் சுமைதானா?

### அங்கவீனர்களும் சமூகத்தில் மனிதர்கள்

இன்று அங்கவீனர்களைப் பற்றி பொதுநலநோக்குடன் சிந்தித்த மனித சமூகம் ''அங்கவீனர்'' களையும் சமூகத்தில் ஒரு ''மனித அங்க'' மாகக்கணிக்கின்றது. இந்தக் கணிப்பு இன்று உலக நாடுகளிலும் மக்கள் மத்தியிலும் சிந்தனைகளைக் கிளறிவிட்டிருக்கின்றது.

> இன்று உலக ஊனமுற்றோர் தினம். இதனை முன்விட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

பிறப்பில் அங்கவீனனாகப் பிறந்தாலே அங்கவீனன் என்ற நிலைபோய் சுகதேகியான மனிதன் கூட இப்போது யுத்த நிலயால் அங்கவீன பதிவேட்டில் எந்த நேரமும் பதிவு செய்து கொள்ளவேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றான். எங்கேயாவது உள்ள ஓர் ஊனமுற்றோர் புனர் வாழ்வு நிலையத்தில் தன்னைப் பதிவு செய்து கொள்ள வேண்டிய அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வில் அக்கறை கொண்ட பொதுநலவாதிகள் சிலர் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தை ஆரம்பித்தனர். இதன் ஸ்தாபக உறுப்பினர்களில் முக்கியமானவர்கள் அருட்சகோதரி லூர்த்து யோசப், மருத்துவ கலாநிதி எஸ். சண்முகலிங்கம் போன்ற மேலும் பலராகும். இன்று எமது சங்கம் ஊனமுற்றோருக்கான பற்பல நற்பணிகளை ஆற்றிவருகின்றது.

### ஊனமுறுதலுக்கான காரணங்கள்

ஊனம் உண்டாகாமல் தடுக்கக் கூடிய வழிவகைகள் பல உண்டு. அவற்றை அறிவதன் மூலம் வலது குறைவு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

சிலர் பிறக்கும்போதே ஊனமுற்றவர்களாகப் பிறக்கிறார்கள். சில பிறப்புக் குறைபாடுகள் பெற்றோரின் குடும்பங்களில் இருந்தால் குழந்தைகளுக்கு இக்குறைபாடுகள் ஏற்பட இடமுண்டு. இப்படியான குறைபாடுகள் உள்ள குடும்பங்களில் உள்ளவர்கள், தங்கள் உறவினர் அல்லாதவர்களைத் திருமணம் செய்வது உகந்தது. மொங்கோலிசம் (Mongolism) என்று குறிப்பிடப்படும் பிறப்புக் குறைபாடு பெரும்பாலும் முப்பது வயதைத்தாண்டிய பெண்களுக்கு, பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது. முப்பது வயதுக்குள் திருமணமாகி குடும்பத்தை நிறைவு செய்வதன் மூலம் மொங்கோல் பிள்ளைகள் பிறப்பதைத் தடுக்கலாம்.

கர்ப்பகாலத்தில் கிடைக்க வேண்டிய போஷாக்குக் குறைவடைவதாலும், உயிர்ச்சத்துக் குறைபாட்டினாலும் வலது குறைவு ஏற்படுகிறது. கர்ப்பிணிகள், ஜேர்மன் சின்னமுத்து போன்ற தொற்று நோய்களுக்குள்ளாதல், வைத்திய ஆலோசனையின்றி மருந்து பாவித்தல் வலது குறைவு ஏற்படும் வாய்ப்பை அதிகமாக்கலாம். போலியோ நோய் குழந்தைகளை வலது குறைந்தவர்களாக ஆக்கிவிடும்.

### வலது குறைவதிலிருந்து மீட்கலாமா?

உரிய காலத்தில் வழங்கப்படும் சிகிச்சை உதவியினால் பெரும்பாலானோரை ஊனமுறும் நிலையிலிருந்து மீட்கலாம். வலது குறைவை நிவர்த்தியாக்கும் திட்டங்களை மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தலாம்

★ வலது குறைவு ஏற்படுவதைத் தடுப்பது.

★ வலது குறைவுக்குட்பட்டவரின் செயற்பாட்டைப் பாதிக்கும் காரணிகளைக் குறைத்தல்.

★ வலது குறைவு ஏற்பட்டவருக்கு சமூகத்தில் கிடைக்கும் துரதிர்ஷ்ட நிலையைப் போக்குவதற்கு வலது குறைந்தவருக்கு சமூகச் சூழலைத் திருப்தியான இடமாக மாற்றுதல்.

ஒருவருக்கு வலது குறைவு ஏற்பட்டவுடன் இனங்கண்டு அதற்கு உடனடியான பரிகாரத்தை அளிக்க முடியுமானால் வலது குறைவுக்குள்ளான ஒருவர் சாதாரண மனிதரைப்போல வாழ்வதற்குத் தேவையான வளர்ச்சியை எம்மால் ஏற்படுத்த முடியும். குழந்தை பிறந்தவுடன் தாய்ப்பால் ஊட்டவேண்டும் அது நோய்களிலிருந்தும் குறைபாடுகளிலிருந்தும் குழந்தையைக் காப்பாற்ற இயற்கை வழங்கியுள்ள நன்கொடை ஆகும்.

குழந்தைகளுக்கு உரிய காலத்தில் போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நோயினால் ஏற்படும் அங்கக் குறைபாட்டைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**கா. கணேசதாசன்**
(செயலாளர், யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்.)

**நாளை**

கார்த்திகை 19
திங்கட்கிழமை
திதி: அட்டமி
மாலை 6–50 வரை.
நட்சத்திரம்: சதயம்
முற்பகல் 9.52 வரை
சுபநேரம்: 12.16—1.46
இராகுகாலம்: 7.46– 9.16
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நொண்டியற்றவரிடம் இருந்து நிதியை எதிர்பார்ப்பது மூடத்தனமாகும்.

-ஜேர்மன் பழமொழி

# செய்திக் கொத்து

## நூலகர்களாக நியமனம்

சாவகச்சேரி, டிசெ. 3

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் நூலக உதவியாளர்களாக, பணி புரிந்த கு.வைகுந்தவாசன், பொ. ரவீந்திரன் ஆகியோர் அண்மையில் நடைபெற்ற நூலகர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நூலகர்களாக பதவிஉயர்வு பெற்றுள்ளனர்.

இவர்கள் முறையே வலி. மேற்கு பிரதேச சபை நூல் நிலையத்திற்கும், வவுனியா நகரசபை நூல் நிலையத்திற்கும் வடக்கு — கிழக்கு மாகாண சபையால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## மரக்கன்றுகள் விநியோகம்

வேலணை,. டிசெ. 3

வேலணை பிரதேச சபையினால் அப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு நிழல் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நிழல் மரக்கன்றுகளான மலைவேம்பு, சமண்டலை. தேக்கு என்பனவற்றினைப் பெற்று ஒவ்வொரு சனசமூக நிலையமும் பொது இடங்களில் வைத்து பாதுகாத்து வளர்த்துசூழல் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றது.

(ம-167)

## நெடுந்தீவில் மரம் நடுகை

நெடுதீவு, டிசெ. 3

நெடுந்தீவு பிரதான வீதியின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்கள் நடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மகா வித்தியாலய உயர் வகுப்பு மாணவர்களின் உதவியுடன் இந்தப்பணி இடம் பெற்றுள்ளதாக மரம் நாட்டு இயக்கத் தலைவர் இரா. தர்மலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-111)

## இருவருக்கு முதுமாணிப் பட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ். பல்கலைக்கழகத்தால் மேலும் இருவருக்கு முதுமாணிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் விரிவுரையாளரான சின்னத்தம்பி பத்மலிங்கத்திற்கு கர்நாடக சங்கீதத்தில் முதுமாணிப் பட்டமும், வவுனியா வளாகத்தில் ஆங்கில விரிவுரையாளராகக்கடமையாற்றும் கந்தையா சிறிகணேசனுக்கு மொழியியலில் முதுமாணி பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

(ம-6 5)

## இராஜ கோபுரம் அமைப்பு

கொழும்புத்துறை, டிசெ. 3

கொக்குவில் மஞ்சவனப் பதி அருள் மிகு ஸ்ரீ முருகன் கோயிலுக்கு புதிய இராஜ கோபுரம் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

தற்போது கோபுர முன் வாயில் மணிமண்டபம் அமைக்கும் பணியும் ஆலய பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ம-30)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், டிசெ. 3

அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலயத்தில் இருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியோரில் ஒரு மாணவன் சித்தி அடைந்துள்ளான்.

பாடசாலை வரலாற்றில் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் மட்டுமே ஒவ்வொரு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஊக்கமுடன் உழைத்த அதிபர் த. மாதவனையும் ஆசிரியர்களையும் அனலைதீவு வடலூர் சனசமூக நிலையத்தினர் பாராட்டியுள்ளனர்.

(ம-10)

## கடுங் காற்றால் ஏழு குடிசைகள் தூக்கி வீசப்பட்டன

தென்மராட்சி, டிசெ. 3

கடந்த வாரம் வீசிய கடுங் காற்றினால் துன்னாலை தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இருந்த ஏழு குடிசைகள் தூக்கி வீசப்பட்டன. கடும் மழை காரணமாக இந்த வீடுகளிலிருந்த குடும்பங்கள் வேறு இடங்களில் தங்கியிருந்ததால் சேதம் ஏற்படவில்லை.

[ம—117]

## திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம், டிசெ. 3

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலில் இருந்து கிழக்கே செல்லும் நாவலர் வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது.

நல்லூர் திருவிழாக் காலங்களில் வாகனப் போக்குவரத்துக்கான முக்கிய பாதையாக இந்த வீதி இருக்கின்றபோதும் நீண்ட காலமாக அது கவனிக்கப்படாமலேயே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-5)

## சனசமூக நிலையத்துக்கு உதவி

கொழும்புத்துறை, டிசெ.3

கொக்குவில் கலைவாணி சனசமூக நிலையத்தில் சுகாதாரத்தைப் பேணும் வகையில் அங்கு மலசலகூடம் அமைப்பதற்காக 25 ஆயிரம் ரூபா நிதி உதவியை நல்லூர் பிரதேச சபை மேற்படி சனசமூக நிலையத்துக்கு வழங்கியுள்ளது.

(ம.30)

## தபாலகம் இடம்மாற்றம்

கொழும்புத்துறை, டிசெ. 3

தென்மராட்சி மிருசுவில் உபதபாலகம் தற்பொழுது கரவெட்டி அரசடியிலுள்ள சோனப்பு வீதியில் இயங்கி வருகின்றது.

(ம-30)

## அமைச்சு பணிப்பு

நெடுந்தீவு, டிசெ.3

நெடுந்தீவு பிரதான வீதி திருத்தப் பணிகளுக்கென மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை துரிதமாகத் தயாரித்அத் தருமாறு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-111)

# கைதான தமிழ் இளைஞர் விடுதலைக்கு உதவுக!

## காணாமற்போனோர் சங்கம் நோர்வேயிடம் கோரிக்கை

சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் அவர்கள் மீதான நீதிமன்ற விசாரணைகளை விரைவில் மேற்கொண்டு விடுதலை செய்யத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இலங்கைக்கான நோர்வேத் தூதரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக நோர்வேத் தூதருக்கு மேற்படி சங்கம் அனுப்பியுள்ள மகஜரில் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போயுள்ளவர்களை விடுவிக்கும்படி ஜனாதிபதியிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் எமது சங்கம் பலமுறை கோரியது. எமது கோரிக்கை குறித்துப்பாதுகாப்பு அமைச்சு இப்படியானோரை தாம் கைது செய்யவில்லை என்றும் அவர்களைத் தம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவித்தது.

ஆனால் கைதான சுமார் 1500 பேர் அரச படையினரின் பாதுகாப்பிலும், சிறைகளிலும் இருப்பதாக நாம் அறிந்துள்ளோம்.

இவர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

என்று கூறப்பட்டுள்ளது.

(இ-ஒ)

## கலைவிழா

சாவகச்சேரி, டிசெ. 3

அல்வாய் பாரதிதாசன் நூலக ஆண்டு விழாவும், பாலர் பாடசாலைக் கலை விழாவும் இன்று ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு நூலகத்துக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நூலகத்தின் தலைவர் கி. நடராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசனும் கௌரவவிருந்தினராக போரூட் திட்ட உத்தியோகத்தர் நா. கோகுலதாஸும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரம், போரூட் உதவித்திட்ட இணைப்பாளர் திருமதி எஸ். தேவிகாராணி, ஆசிரியர் எஸ். முரளீதரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(இ-31)

## நகுலேஸ்வரக் குருக்களுக்கு பவளவிழா

யாழ்ப்பாணம், டிசெ 3

கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோயிலின் பிரதம குரு பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் பவள விழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிமுதல் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்ன பூரணி மண்டபத்தில் இடம்பெறுகிறது.

காலை 6-30க்கு ஸ்ரீதுர்க்கா தேவி அம்பாளுக்கு விசேட பூஜைகளுடன் தொடங்கும் பவள விழா நிகழ்வுகளில், மாவை, ஆதீனகர்த்தா, மகாராஜ ஸ்ரீ க. து. ஷண்முகநாதக் குருக்கள், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் உட்பட பலர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

அத்துடன் பவளவிழா நாயகருக்கு ''நகுலேஸ்வரானுக்ரஹவித்யாதரர்'' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

பவளவிழா மலரை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு உரை நிகழ்த்துவார். மலரின் முதற் பிரதியை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் பெற்றுக் கொள்ளும்.

(இ-ஒ)

## கண்காட்சி

சாவகச்சேரி, டிசெ.3

போரூட் நிறுவனத்தின் காரைநகர் திட்டத்தினால் நடத்தப்படும் நலன்புரி நிலையங்களின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குழந்தைகள் மையக கண்காட்சி நிகழ்வு இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. தனபாலசிங்கமும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலர் வி. வேதநாயகமும், போரூட் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் நா. கோகுலதாசும். கலந்துகொள்வர்.

(இ-31)

## பயிற்சிக் கலந்துரையாடல் வகுப்பு

கோப்பாய், டிசெ. 3

இலங்கை தொழில் நுட்பவியல் சேவை உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம்,2 ஆம், திணைக்கள பரீட்சைக்கான பயிற்சிக் கலந்துரையாடல் வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு நல்லூர் பிரதேசசபைகொகுவில் உப பணிமனை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என மேற்படி சங்கத்தலைவர் வீ செ. சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

(இ — 72)

## தீவக ஆசிரியர் தொழிறசங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.3

செயற்றிறனுடைய இடமாற்ற சபை ஒன்றை அமைக்குமாறு கோரி தீவகக்கல்வி வலய ஆசிரியர்கள் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஆசிரியர்கள் தரம் 9 க்கு மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ள பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டினை அவர்கள் பகிஷ்கரிக்கவுள்ளனர் என வடமாகாண ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தீவகக் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பலரும் நீண்டகாலம் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் சேவையாற்றியுள்ளனர்.

எனவே செயற்றிறனுடைய இடமாற்ற சபை ஒன்றை அமைத்து ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## ஊனமுற்றோருக்கு...

(11 ஆம் பக்கத்தொடர்)

தவிர்க்கலாம்.

திருமணகாலத்தில் பரம்பரை நோய்கள் உள்ளவர்கள் உறவினர்களைத் திருமணம் செய்யாது தவிர்ப்பதன் மூலம் குறைபாடு உள்ள குழந்தைகளைப் பெறுவதைத்தடுக்கலாம்.

கர்ப்பகாலத்தில் போலிக் அமிலம் போன்ற விட்டமின்களையும் இரும்புச்சத்துள்ள குளிகைகளையும் ஒழுங்காக எடுப்பதன் மூலம் பிறப்புக் குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தவிர்க்கலாம்.

பெண்கள் 30 வயதுக்கு முன் தங்களுக்கு வேண்டிய குழந்தைகளைப் பெறுவதன் மூலம் ''மோங்கல்'' குறைபாடுள்ள குழந்தைகள் பெறுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

வீதியில் பயணம் செய்யும் பொழுது வீதி விதிமுறைகளை அனுசரித்து செல்வதன் மூலம், விபத்துக்களைக் குறைத்து ஊனமுறுவதைத் தவிர்க்கலாம்.

நீரிழிவு போன்ற நோயுள்ளவர்கள் தங்கள் பாதங்களைக் கவனமாகப் பராமரிப்பதன் மூலம் அவர்கள் அங்கவீனமாவதைத் தவிர்க்கலாம்.

அதிகுருதி அமுக்கம் உள்ளவர்கள், தங்களுடைய மருந்துகளை ஒழுங்காக எடுத்து உணவிலும் கட்டுப்பாடாக இருப்பதன் மூலம் பாரிசவாத நோய் உண்டாகி அங்கவீனம் உண்டாவதைத் தவிர்க்கலாம்.

### ஊனமுற்றோருக்கு தாராளமாக உதவுங்கள்

அங்கவீனர்கள் எமது சமூக அமைப்பில் ஒரு பிரதான பிரிவினர். அவர்களை ஆதரித்து அரவணைத்து உதவிகளைச் செய்வது மாபெரும் புண்ணிய கருமமாகும். விழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றிற்கு இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவிடும் நாம் ஏழைகள், ஊனமுற்றவர்கள், கைம்பெண்கள் போன்றோருக்கு உதவ முன்வருவதில்லை. இத்தகைய நடமாடும் உருவங்களில் தான் இறைவன் இருக்கின்றான். இவர்களை நாம் அமங்கலத்தின் சின்னங்கள், முழுவியளத்திற்கு உதவாதவர்கள் என ஒதுக்கிவிடுவது இறைவனையே ஒதுக்குவது போலாகும். ஊனமுற்றோர் மேல் இரங்க வேண்டும். நொந்த மனத்தினை மகிழ்ச்சி பெறச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஊனமுற்றோரின் சிரிப்பில் நாம் இறைவனைக் காணலாம்.

ஊனமுற்றோரின் நிலைமைகளைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்குச் சிறந்த வாழ்க்கைப் பாதையைத் தேடிக் கொடுப்பதற்கும், தொழில் நுட்ப அறிவு, சுயதொழில் முயற்சி ஏனைய துறைகள் ஆகியவற்றிலும் சிறந்த பயிற்சிகளை வழங்கி அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வரும் யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் இணைந்து செயற்படுங்கள். அதன் மூலம் அங்கவீனர் வாழ்வில் ஏற்படும் நல்வாழ்விற்கு பங்காளியாகி அறத்தைத் தேடுங்கள். சர்வதேச ஊனமுற்றோர் தினமாகிய இன்று தொடங்கி சகலரும் ஊனமுற்றோருக்கு சிறந்த வாழ்வை வழங்குவோமென உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் அனைவரதும் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். ★

# அமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்கு கட்டுப்பாடு

வெளிநாடுகளில் கருத்தரங்கு, மாநாடு போன்றவற்றில் கலந்து கொள்ளச் செல்லும் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று அமைச்சுச் செயலாளர்களை திறைசேரி பணித்துள்ளது. தற்சமயம் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக நிதி வீண் விரயம் செய்யப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக திறைசேரி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் முன் அனுமதி இன்றி வெளிநாடுகளுக்குச் செல்லும் அமைச்சர்கள் அங்கு அரசு சார்பில் கலந்துரையாடல்களில் பங்குபற்றினால் அவர்களால் செலவிடப்படும் நிதி அவர்களிடம் இருந்து அறவிடப்படும் என்றும் திறைசேரி அறிவித்துள்ளது. (இ-3)

## 182 பரீட்சை நிலையங்கள்

இம்மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ(சாதாரண தர) பரீட்சைக்கென யாழ். மாவட்டத்தில் 182 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தென்மராட்சி, தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கென 73 நிலையங்களும் வடமராட்சி மற்றும் வலிகாமம் வலயங்களுக்கென 109 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன என்று யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(இ-10)

## மருந்து பற்றாக்குறை நீங்கியது

வடமராட்சி,டிசெ.3

மந்திகை ஆதார வைத்திய சாலையில் மருந்து வகைகளுக்கு இருந்து வந்த பற்றாக்குறை நீங்கியுள்ளது.

மூன்றாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் சில தினங்களுக்கு முன்னர் யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டதை அடுத்து இப்பற்றாக்குறை நீங்கியுள்ளது. (ஜ-173)

## ஊனமுற்றோர் தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.3

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு யாழ்.ஊனமுற்றோர் சங்கம் நடத்திய வினா விடைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

கந்தையா நடராசா(காதி அபூபக்கர் வீதி, யாழ்.), அகிலாண்டேஸ்வரி இராஜரட்ணம்(உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), சி.உமா (கொழும்புத்துறை இந்து மகா வித்), வ.யோசப்பிரதீபன்(முருகமூர்த்தி கோவிலடி, உடுவில்தெற்கு), ஸ்ரீ.துஸ்யந்தினி (துரைராசா வீதி, வண்ணார் பண்ணை), இராஜரெட்ணம் அனுசியா (தோப்பு, அச்சுவேலி), கஸ்ரோ பேரின்பநாயகம் (கேணியடி, கொக்குவில்), மேரி பிறேமிளா யோசவ் (கலைநகர், சித்தன்கேணி), தர்சனா இராஜரட்ணம் (தோப்பு, அச்சுவேலி) (ம-5)

# காய்ச்சல் பரவுகின்றது

குடாநாட்டில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து நுளம்பினால் பல்வகைக் காய்ச்சல்களும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களில் மட்டும் நூற்றுக்கணக்கானோர் யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் காய்ச்சலுக்காகச் சிகிச்சை பெற்றுள்ளனர். 30க்கும் மேற்பட்டோர் 'வார்ட்டில்' தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பற்றைகள் வளர்ந்துள்ளதனாலும், வெள்ளம் தேங்கி நிற்பதாலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் நுளம்பு மூலம் பரவும் நோய்கள் மேலும் பெருக வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-15-139)


# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இறுதியாண்டு
இந்து சமய நெறியைச் சார்ந்த

**செல்வி சி.பகீரதி**

அவர்களின் அன்புச் சகோதரன்

**செல்வன் சின்னத்துரை முரளீதரன்**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலைச் சமூகம்,
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.

(81197)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேந்திரன் சீதாலெட்சுமி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலெட்சுமி மகேந்திரன் (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை மகேந்திரன்(ஓய்வுபெற்ற C.W.E. உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், சாயிலதாவின்(யாழ். மாநகரசபை நூலகம்) அன்புத் தாயாரும், சிறிபாலனின் (யாழ்.மாநகரசபை வேலைப்பகுதி) மாமியாரும் சிறீஸ்கந்தராஜாவின்(யாழ்.மாநகரசபை சுகாதாரப்பகுதி) அன்பு மைத்துனியும், அமிர்தனின் பெரியதாயாரும் தேவதர்சன், யதர்சன், சபேசன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03-12-2000 காலை 10.30 மணிக்கு(பு.நே) சுண்டிக்குழியில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*32 /4, விதானையார் வீதி,*
*சுண்டிக்குழி,*
*யாழ்ப்பாணம்.* (81200)

தகவல்:
ப.சிறிபாலன் (மருமகன்),
சிறீஸ்கந்தராஜா (மைத்துனர்)

## கதிர்காமர் நாகரெட்ணம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

கதிர்காமர் நாகரட்ணம் 30-11-2000 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.* (81199)

தகவல்:
கதிர்காமநாதன் (மகன்)

## திருமதி மேரி கபிரியேலா அந்தோனிப்பிள்ளை

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் ,வவுனியாவில் வசித்தவருமாகிய திருமதி மேரி கபிரியேலா அந்தோனிப்பிள்ளை 01-12-2000 வெள்ளிக்கிழமை கண்டியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், இராசநாயகம் (கனடா), திரேசா சிறியபுஸ்பம் (ஆசிரியை, யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்), மதுரநாயகம் (கனடா), மரிஸ்ரெலா (ஆசிரியை, வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி (கனடா), டொமினிக் அல்பிரட் (சாமுவேல் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), உதயவாணி (கனடா), மகாரத்தினம் (அஞ்சல் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டென்ஷியா, ஜெறின்ஷியா (யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), பிரசாந், பிரவீந், மகிபன் வெஸ்லி, மதிபன் லெஸ்லி, விதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 05-12-2000 செவ்வாய்க்கிழமை வவுனியா இறம்பைக்குள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.23/1, சோமசுந்தரம் அவெனியு,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (81196)

தகவல்
மருமகன், மகள்.


# கொமர்ஷல் வங்கி

01.12.2000 முதல் வைப்புகளுக்கான வட்டி வீதங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதனை அறியத்தருகின்றோம்.

**1 மாத நிலையான வைப்பு அறிமுகம்**

**17%**

ஏற்றுக்கொள்ளப்படும் அதிகுறைந்த வைப்புத்தொகை ரூபா 100,000/=

தேறிய வருடாந்த வட்டி 18.39%

COMMERCIAL BANK

Our Interest is in you.

(C/14119)



# ஆறாம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

மண்ணில் 16.05.1958 — விண்ணில் 08.06.2000



அமரர் தம்பு சபாரத்தினம்

மண்ணில் 23.05.1998 — விண்ணில் 08.06.2000



செல்வி சபாரத்தினம் விதூஷிகா

மண்ணில் 28.10.1946 — விண்ணில் 08.06.2000



திருமதி தம்பு மனோன்மணி

மாதங்கள் ஆறு சென்றாலும் மறக்க முடியவில்லையே உங்கள் திருமுகத்தை
அன்புத் தெய்வமே! என் செல்வமகள் விதூஷியையும் கூட அழைத்துச் சென்றீரோ!
துணை நின்ற சகோதரியையும் கூடவே அழைத்தீரோ!
பிள்ளைகள் தேடி அழ மூவர்க்கும் கொடிய ஷெல் தான் இயமனானதோ!
உங்கள் பிரிவால் நாம் ஏங்கியே தவிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்பு மனைவி - மல்லிகாதேவி
பிள்ளைகள் - விதூஷன், மதூஷன்.
உற்றார், உறவினர்கள்.

நிரந்தர முகவரி:
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*426/2, கில்னர் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(81153)


## கிரிக்கெட் வீரர்கள் கவனத்துக்கு!

யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்சியில் பங்குபற்றிய 15 வயதுக்கு உட்பட்ட சகல வீரர்களும் தங்கள் அஞ்சல் அடையாளஅட்டை மற்றும் விசேட அடையாளஅட்டை ஆகியவற்றுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் பயிற்சிக்குத் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் கே.இராஜதுரை கேட்டுக் கொண்டுள்ளார். (இ-ஒ)

## தொழில் நுட்ப மாணவர் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

கொக்குவில்,டிசெ.3

படையினரால் கைது செய்யப்பட்ட யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இ.சிறிரங்கநாதனை விடுவிக்கக் கோரி தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று ஒன்பதாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

கைதான மாணவன் இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானம் எடுப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 9 மணிக்கு கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-69-10)

## மாநகர சபை ஆணையாளர் மாநாடு

கொழும்பு,டிசெ.3

மாநகர சபை ஆணையாளர்களின் 8ஆவது மாநாடு நேற்று தெஹிவளை கல்கிசை மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.பாலசிங்கம் உட்பட 14 மாநகரசபை ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பது தொடர்பாகவும் மாநகர சபைச் சட்டங்களை தற்போதைய தேவைப்பாடுகளுக்கு ஏற்ப திருத்தி அமைக்க வேண்டிய தன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## லங்கா முடித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வென சிபார்சு செய்யப்பட்டோர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வந்து திரும்பிச் செல்வோர் ஆகியோருக்கும் கடந்த ஓகஸ்ட் மாதம் பயண அனுமதி வழங்கப்பட்டோருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சி.பி.ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேசிய இக்குழுவினர், கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் ஒரு சந்தேக நபரை விசாரணை செய்து அவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டு சென்றுள்ளதாகவும் அறிய வந்தது. (உ)

## நிபந்தனையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் தயார் என்று நோர்வே தூதுக் குழு மூலம் புலிகள் எங்களுக்குத் தெரியப்படுத்தினர்.

ஆனால் அடுத்த நாளே புலிகள் தமது சர்வதேச இணையத் தளத்தில் (Web இல்) பேச்சுக்கு முன்நிபந்தனை விதிக்கும் தகவல்களை வெளியிடுகின்றனர்.

பொறுப்புள்ள அரசு என்ற முறையில் நாம் இத்தகைய தகவல்களையோ, பொறுப்பற்ற பேச்சுக்களையோ, பிரபாகரனின் வெறும் உரைகளையோ பொருட்படுத்தி - அவற்றைக் கவனத்தில் கொண்டு - அவற்றின் அடிப்படையில் செயற்பட முடியாது.

எனவேதான் புலிகளின் உண்மை நிலைப்பாடு என்னவென்பதை மீண்டும் அறிந்து உத்தியோகபூர்வமாக எமக்கு அறிவிக்கும்படி நோர்வேயை நாம் கேட்டுள்ளோம்.

பேச்சுக்கு ஏற்பாட்டாளராக நோர்வேயை நியமித்துள்ளோம். அவர்கள் மூலம் தெரிவிப்பதே அதிகாரபூர்வமானதாக இருக்கும். எனவே அவர்கள் மூலம் புலிகள் தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தட்டும்.

அதன் பின்னர் நாம் எமது முடிவை எடுப்போம்.

நிபந்தனையற்ற பேச்சுக்குப் புலிகள் உண்மையில் தயார் என்றாலும் நாமும் அதற்குத் தயார். பேச்சு நடக்கும் போது யுத்தமும் தொடரும்.

பேச்சில் உடன்பாடு காணப்பட்டால் அப்போது அதன் அடிப்படையில் யுத்த நிறுத்தம் செய்யலாம். அதற்கு முன்னர் அதைச் செய்வதானால் புலிகள் தான் அதனைச் செய்ய வேண்டும்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றவே ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ளார்; சமாதானப் பேச்சுகளுக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காகவல்ல. எனக்குத் தெரிந்தவரை அத்தகைய பேச்சுக்கள் எதிலும் ஜனாதிபதி பங்குபற்றவில்லை. அத்தகைய பேச்சுக்கள் ஏதும் வெளிநாடுகளில் நடக்கவும் இல்லை.

நிதி இல்லை என்பதற்காக யுத்தத்தை நிறுத்த முடியாது. யுத்தத்தை புலிகள் கைவிடும் வரை - அந் நிலைக்கு அவர்களைத் தள்ளும் வரை - யுத்தம் தொடரும்.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் பேச்சு நடத்தும் படி அரசை வற்புறுத்துகின்றன என்று கூறுவது தவறு. அவை பேச்சுக்குத் தமது ஆசீர்வாதத்தைத் தெரிவித்துள்ளன அவ்வளவே. (உ)

## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சுமார் 35 நிமிட நேரம் புலிகள் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

போலியோ சொட்டு மருந்து வழங்குவதை முன்னிட்டு 'யுனிசெவ்' முன்முயற்சியில் நேற்றும் நேற்று முன்தினமும் யுத்த நிறுத்தம் செய்ய அரசுப் படைகள் இணங்கியிருந்ததால் புலிகளின் தாக்குதலுக்குப் படையினர் பதில் தாக்குதல் நடத்தவில்லை என்றும் அந்த நிலையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## லண்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை ஆகிய நான்கு தலைப்புகளில் பிரபாவின் உரையைத் தெளிவாக விளக்கினார் அன்ரன் பாலசிங்கம்.

பேச்சுக்கு புலிகள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை; போரை நிறுத்துமாறு நாங்கள் கோரவில்லை; ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும் என நாங்கள் கோரவில்லை. படிப்படியாகப் போர்ச்சூழல் நீக்கப்பட வேண்டும் என்றே கோரினோம். அது நிபந்தனை அல்ல. ஆனால் பேச்சுக்குப் புலிகள் நிபந்தனை விதிப்பதாக சிங்களவர்கள் கூறுகின்றனர் - என்று அவர் தனது நீண்ட உரையில் சுட்டிக் காட்டினார்.

இன்று அதிகாலை இச்செய்தி அச்சுக்குப் போகும் போதும் அவரது உரை தொடர்ந்தபடி இருந்தது.

அன்ரன் பாலசிங்கத்தின் உரையின் முழு விவரமும் நாளைய உதயனில் வெளியாகும். (ஐ-7)

இன்று ஆரம்பம்!
A/L 2001
DAY CLASS
கலைப் பிரிவு
காலை 9.00 மணி
(81119)
D.M.I
யாழ்நகர்.

## பயணிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பலில் வடக்கே எடுத்து வரப்படுவதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

தபால்கள் தேங்கிக்கிடப்பது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி குகேந்திரனிடம் யாழ். தபால் அதிகாரிகள் முறையிட்டிருந்தனர். அதைத் தொடர்ந்து அவர் தபால் அமைச்சருடன் தொடர்பு கொண்டதை அடுத்தே தபால் பொதிகள் இக் கப்பலில் எடுத்துவரப்படுவதாகவும் ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## அலுவலகம் திறப்பு

கொழும்பு,டிசெ.3

யாழ்ப்பாணத்துக்கும் இரத்மலானைக்கும் இடையில் நடைபெறும் பயணிகள் விமான சேவைக்கு பயணச் சீட்டுக்களை வழங்கும் அலுவலகம் கொழும்பு பம்பலப்பிட்டியில் விரைவில் திறக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலக்கம் 224, காலி வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபைக் கட்டடத்தில் இந்த அலுவலகம் அமைக்கப்படும் என்று ஈ.பி.டி.பி அமைப்பு தெரிவித்துள்ளது. (ம-6)

BEACON
'பொற்குடத்திற்கு பொட்டும் தேவையில்லை,
பூக்கடைக்கு விளம்பரமும் தேவையில்லை.'
BEACON
(வெலிங்டன் சந்தி அருகில்)
A/L 2001 => DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: நாளை - 8.00 a.m.
கணக்கீடு : திரு.பாலவாசன்
(81167)

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் யசோதா (பெற்றி)

(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்ட அருணாசலம் யசோதா நேற்று (02.12.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருணாசலம் - சரஸ்வதியின் அன்பு மகளும், ஜசிந்தா (கொழும்பு), அருள்நாதன், நந்தீஸ்வரன் (தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்), நந்தபவானி (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலய மாணவி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சந்திரன், சுதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பழை மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருணாசலம் குடும்பத்தினர்.

*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை*
(C/14122)

### திருமதி அருமைநாயகம் சிவஞானம்

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி அருமைநாயகம் சிவஞானம் நேற்று (02-12-2000) சனிக்கிழமை கோண்டாவில் கிழக்கில் காலமானார்.

அன்னார் வே.குமாரு அருமைநாயகம்(யாழ்.மாநகர சபை ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நல்லான் - வள்ளி தம்பதிகளின் அருமை மகளும் திரு.திருமதி வே.குமாரு (யாழ்.மாநகர சபை ஓய்வூதியர்) - அன்னம்மா அவர்களின் அருமை மருமகளும், குமாரகுரு ( யாழ்.மாநகரசபை நீர் விநியோகப் பகுதி), குமாரதாசன்(யாழ்.மாநகரசபை நீர் விநியோகப் பகுதி), கோகுலவதி, மதனகுமார் (கோண்டாவில் இந்து ம.வி. மாணவன்), ரோஷ்மதி (கோண்டாவில் இந்து ம.வி. மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் வல்லிபுரம், சிவக்கொழுந்து பூபாலசிங்கம் ஆகியோரின் அருமைச சகோதரியும், திருமதி துரைராஜா அருமைமலரின் மைத்துனியும், வல்லி துரைராஜாவின் சகோதரியும், து.சத்தியலெனின்(யாழ். போதனா வைத்தியசாலை - வனஜா தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர்) கோகுலலெனின் (லண்டன்), சூரியலெனின் (ஜேர்மனி), திருமதி சுகுணா பிரபாகரன் (சுவிஸ்) காந்தலெனின்(கோண்டாவில் இந்து ம.வி. மாணவன்) மயூரலெனின்(கோண்டாவில் இ.ம.வி. மாணவன்), வனஜா (கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை மாணவி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-12-2000) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் கொட்டைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
T.P. 070-212972
(81207)

தகவல்:-
கு.அருமைநாயகம்
(கணவர்)

### சின்னத்துரை விநாயகமூர்த்தி

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விநாயகமூர்த்தி நேற்று 02-12-2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும்,அளவெட்டி தெற்கு வைத்திலிங்கம் (நொத்தாரிசு),கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகவதியின் (இந்திரா) அன்புக்கணவரும் தர்சினி, திசாயினி (அருணோதயாக் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தவமணி, வைத்தியநாதன்(பெரியண்ணை), திருநாவுக்கரசு(கிளி), சண்முகராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் இரத்தினலிங்கம் (தலவாக்கொல்லை), தவமணி, சிவயோகம்,ரதிதேவி(ஜேர்மனி), ஆகியோரின் அருமை மைத்துனரும், தவரஜனி(கொழும்பு பல்கலைக்கழகம்), தவஜனனி ஆகியோரின் மாமனாரும் சுரேஸ்குமார், ரமேஸ்குமார், ராஜ்குமார்,வானதீபன்,கஜதீபன்,ஸ்ரீதீபன் ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-12-2000)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல தகனக் கிரியைகளுக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*
(C/14123)

தகவல்:-
சி.வைத்தியநாதன்
(சகோதரன்)

JAFFNA
TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA.
(Incorporated with IPSS)
REGD. NO. - 15251 T.P. NO. - 021 3335
IN VIEW OF OUR 21st ANNIVERSARY J.T.I
1250 மாணவர்களுக்கு
புலமைப் பரிசில் திட்டம் 2001

யாழ். மாவட்டத்தில் கடந்த 21 வருடங்களாக பல்வேறு துறைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு சிறப்பாகப் பயிற்சியளித்து வரும் எமது நிறுவனத்தில் மாணவர்களின் கணனி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இரண்டாவது தடவையாக கணனிப்பயிற்சி நெறிக்கு 2001ஆம் ஆண்டில் போட்டிப்பரீட்சை (பொது அறிவு, நுண்ணறிவு) மூலம் புலமைப்பரிசில் வழங்கவுள்ளோம் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்க உள்ள பயிற்சிநெறிகள்

Diploma in Software Engineering (Duration: 12 Months)
Diploma in Windows Application (Duration: 5 Months)
Diploma in Computer Programming (Duration: 8 Months)
Diploma in Desktop Publishing (Duration: 4 Months)
Diploma in Microsoft Office (Duration: 6 Months)
National Certificate in Computer Application (Duration: 9 Months)

உங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து ரூபா 100 பரீட்சைக் கட்டணத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்பவிரும்புவோர் Registrar, Jaffna Technical Institute என்று பெயரிட்டு யாழ். தபாலகத்தில் மாற்றக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

REGISTRAR,
Jaffna Technical Institute,
No. 07, Palaly Road,
Jaffna.

விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
மகாத்மா புத்தகசாலை - திருநெல்வேலி
ஞானம் புத்தக நிலையம் - நாச்சிமார்கோயிலடி
நாயகபாலன் புத்தகசாலை - மானிப்பாய்
ஜீவா ஸ்ரோர்ஸ் - மல்லாகம்
மொடேர்ன் ஸ்ரோர்ஸ் - தெல்லிபடி
ராஜன் எலக்ரோனிக்ஸ் - சிச்சாவெலி

NOTE:- A/L (2001) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இப் புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகளின் விசேட பிரிவு ஒன்று புரட்டாதி மாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

HEAD OFFICE:
J.T.I,
NO. 52/1,STANLEY ROAD,
JAFFNA
(C/14063)

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி 15-12-2000

BRANCH:
J.T.I,
NO. 7, PALALY ROAD,
JAFFNA.

- Director

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.